கிறிஸ்தவம்

# இயேசுக் கிறிஸ்து



121802

ஆசிரியர் கல்விப் பாடநெறி

| | |
|---|---|
| எழுத்தாளர்: | பயஸ் பெர்ணுண்டோ |
| பாடப்பதிப்பாசிரியர்கள்: | அருள் திரு. அலெக்ஸ் திஸநாயக்க |
| | அருள் திரு. சகோதரர் சைமன் பெர்ணுண்டோ |
| | அருள் திரு. பொஸ்கோ பெர்ணண்டோ |
| | ஒஸ்ரின் டயஸ் |
| | எம். ஜே. ஏ. பெரேரா |
| | டபியூய பீ. எம். லோவு |
| | கே. ஏ. சீ. டீ, குணதிலக |
| | பீ. கணநாதபிள்ளை |
| தளக்கோலம் | ஏ. சிவராஜா |
| படங்கள் | ரீ. எல். பெரேரா |
| மேற்பார்வை: | சே ஏ. பியதிஸ்ஸ |
| | ஆர். பீ. ஏ. ஜயசேகர |
| பணிப்பு | கலாநிதி. எஸ். டீ. லயனல் அமரகுணசேகர |

# இயேசுக் கிறிஸ்து

தொலைக் கல்வி நிறுவகம்
தேசியக் கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| கிறிஸ்தவம் | 1218 |
| இயேசுக்கிறிஸ்து | 121802 |

உள்ளடக்கம் பக்கம்

0 0 அறிமுகம் ........ 3

1.0 குறிக்கோள் ........ 3

2.0 முற்சோதனை ........ 4

பகுதி I

3.0 இயேசுதான் கிறிஸ்து நாதர் ........ 5

பகுதி II

4.0 இயேசுவின் வாழ்க்கை வரலாறு ........ 13

பகுதி III

5.0 இயேசு மேற்கொண்ட இறைபணி ........ 21

பகுதி IV

6.0 இயேசுநாதர் தான் ஆண்டவர் ........ 28

7.0 பொழிப்பு ........ 31

8.0 பிற் சோதனை ........ 32

9.0 ஒப்படை ........ 36

10.0 விடைகள் ........ 36

11.0 சொற் தொகுதி ........ 37

(C) 1989 தேசியக் கல்வி நிறுவகம்

பதிப்பு 1 . 1

## 0.0 அறிமுகம்

மொடியூல் 11802 இல் நீங்கள் கடந்த முறை கிறிஸ்தவ சமயத்திற்கு அளித்த முன்னுரையை செவ்வனே செய்து முடித்திருப்பீர்கள். ஆகவே இம்முறை நாங்கள் இந்த அளப்பதற்கான அலகுவால் உங்கள் கவனத்தை யேசுக்கிறிஸ்து என்னும் தலைப்பில் செலுத்த விரும்புகிறோம்.

இவ்வுலகிலே 33 வருடங்கள் வாழ்ந்த இயேசுவே, இறைவன வாக்குறுதியை நிறைவேற்ற உலக ஆரம்பத்திலேயே இறைவனால் அனுப்பப்பட்ட இரட்சகராவர்

அவருடைய வாழ்க்கையில் இறுதி 3 ஆண்டுகளையும் அவர் தனது தந்தையின் அரசை இவ்வுலகிலே போதனைகளினாலும் கற்பித்தலினாலும் புதுமைகள் செய்வதின் மூலமாகவும் நிலைநாட்டினார்.

இவ்வுலக இரட்சகராக இறைபிதாவின் விருப்பத்தற்காத உயிரை நீத்தார். ஆனால் 3ஆம் நாள் அவர் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எழுந்தருளினார். ஆனால் இறைபிதா சித்தப்படி அவர் எப்போதும் எம்முடன் வாசம் செய்கிறார்

இப்போது நாம் இத் தலையங்கங்களைப் பற்றிப் படிப்போம்.

## 1.0 குறிக்கோள்

பின்வரும் குறிக்கோள்களை இந்த மொடியூலைக் கற்பதன் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

★ இயேசுக் கிறிஸ்துவை திருவெளிப்பாட்டிலும், சரித்திரத்திலும் இருந்து அடையாளம் கண்டு கொள்ளல்.

★ அவரின் வாழ்க்கையில் நடைபெற்ற சில முக்கிய சம்பவங்களில் இருந்து அறிந்து கொள்ளல்.

★ அவருடைய இரட்சணிய பணியை, அவர் மேற்கொண்ட இறைபணியின் மூலம் அறிந்து கொள்ளல்.

★ கிறிஸ்தவர்களுக்கு உகந்த ஒரு வாழ்க்கை முறையை கிறிஸ்துவின் வாழ்க்கைப் படிப்பினை மூலம் ஆக்கி அமைத்தல்.

★ கிறிஸ்தவ ஆசிரியர் என்ற முறையில் இறைவனின் இராச்சியத்தைக் கட்டியெழுப்ப உதவி அளித்தல்.

★ எமது சொந்த வாழ்க்கை முறையில் இருந்து இன்று எம் மத்தியில் வாழும் கிறிஸ்துவை அனுபவவாயிலாக மற்றவர்களுக்குக் காண்பித்தல்.

## 2.0 முற்சோதனை

இம் மொடியூலேக் கற்பிப்பதற்குத் தேவையான முன்னறிவை மீட்டிடுக் கொள்வதற்கு பின்வரும் முற்சோதனைக்கு விடையளிக்க.

சரியான விடையின் கீழ் கீறிடுக.

1 இயேசு இவ்வுலகத்திற்கு வருகை தந்தது.

(1) தீர்வையிடுபவராக
(2) இரட்சகராக
(3) ஆள்பவராக
(4) உலக தீர்க்கதரிசியாக

2 நத்தார் பண்டிகை நமக்கு நினைவுறுத்துவது யேசுவின்

(1) மனிதாவதாரத்தை
(2) விண்ணேற்பை
(3) விருத்தசேதனத்தை
(4) பிறப்பை

3 வருடத்தில் எண்ணிக்கையை இரண்டாகப் பிரிப்பது யேசுவின்

(1) பிறப்பு (3) இறப்பு
(3) உயிர்ப்பு (4) விண்ணேற்பு

4 இயேசு சிலுவையில் மரித்தது.

(1) பெரிய வியாழக்கிழமை
(2) பெரிய வெள்ளிக்கிழமை
(3) பெரிய சனிக்கிழமை
(4) உயிர்த்த ஞாயிறு

5 இயேசு பிறந்த இடம்.

(1) ஜெருசலேம்
(2) நாசரேத்
(3) பைத்தானியா
(4) பெத்தலேகம்

6 இயேசுவின் மரணத்திற்கான தலையான குற்றச் சாட்டு

(1) அவர் தன்னை யூதர்களின் அரசன் என்று எடுத் துரைத்தது

(2) சீசருக்கு வரி செலுத்த வேண்டாம் என மக் களுக்குக்கூறியது.

(3) அவர் தன்னை இறைவனின் மகன் எனக் கூறியது

(4) ஆலயத்தை இடித்துக் கட்டுவதாகப் பகிரங் கமாகக் கூறியது.

7 இறைவன் இரட்சகர் ஒருவரை இவ்வுலகிற்கு அனுப்புவதாக முதல், முதல் வாக்குப்பண்ணியது

(1) ஆபிரகாம், சாராளுக்கு

(2) ஆதாம், ஏவாளுக்கு

(3) மோயின், ஆரோனுக்கு

(4) சாமுவேல், எலிக்கு

8 யேசு இறைவனின் மகன் என எடுத்துரைத்தது.

(1) கானா நாட்டுத் திருமணத்தின் போது

(2) அவர் பாலைவனத்தில் சோதிக்கப்பட்டபோது

(3) விபச்சாரத்தில் அகப்பட்டிருந்த பெண்ணைக் காப்பாற்றிய போது

(4) யேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்ற போது.

உங்கள் விடைகளை இம் மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

இப்போது நீர் இந்தப் பகுதியைச்செய்து முடித்திருக் கிறீர். இயேசுவே வாக்குப்பண்ணப்பட்ட இரட்சகர் என்று நீர் கவனத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளீர்.

பகுதி i

## 3.0 இயேசுவே கிறிஸ்து

இயேசு ஏழையாகப் பிறந்து ஒரு மறைவான வாழ்க்கை வாழ்ந்தார். அவருக்கு 30 வயதாக இருக்கும் போது அவர் 12 அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்து அவர்

களுடன் கலிலோயாகக் கடல் முழுவதும் பயணம் செய்து, இறை அரசைப் பற்றிப் போதித்து வந்தார். இவர்கள் யேசுவைப் பின்பற்றியவர்களாகவும், போதனை செய்தவர்களாகவும், அப்போஸ்தலர்களாக வும் காலப்போக்கில் தெரியப்பட்டார்கள். அந் நாட்க ளில் வாழ்ந்த இஸ்ராயேல் மக்கள் கூட மெசியாவின் (மீட்பரின்) வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார்கள். உலக மக்களின் விடுதலைக்காக கடவுள் இவ ரையே மீட்பராக உலகிற்கு அனுப்புவதாக வாக்குப் பண்ணியிருந்தார். மீட்பர், மெசியா, கிறிஸ்து, அல் லது வர இருப்பவர் எனப் பல பெயர்களால் அறியப் பட்டிருந்தார்.

இயேசுவோடு வாழ்ந்து அவருடைய வாழ்க்கையை தம் வாழ்விலே அனுபவமாகக் கண்ட அப்போஸ்தலர்கள் அவரை மீட்பின் இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். இவையாவும் புனித மத்தேயுவின் செய்தியில் விபர மாகக் கூறப்பட்டிருக்கின்றது.

இயேசு பிலிப்செசரியா நகர்ப்புறம் வந்து அவர் தம் சீடர்களிடம் ''மனுமகனை யார் என்று மக்கள் சொல் கிறார்கள்?'' என்று கேட்டார். அவர்களோ ''சிலர் ஸ்தாபக அருளப்பர் என்றும் சிலர் எலியாசு என்றும் சிலர் எரேமியாஸ் அல்லது இறை வாக்கினருள் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள்'' என்றனர். ''நீங்களோ என்னை யார் என்று சொல்கிறீர்கள்?'' என்று யேசு அவர்களைக் கேட்டார். சீமோன் இராயப்பர் மறு மொழியாக ''நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்'' என்றார். அதற்கு இயேசு ''யோனாவின் மகன் சீமோனே, நீ பேறு பெற்றவன். ஏனெனில் இதை உனக்கு வெளிப்படுத்தியது மனித வல்லமையன்று. வானகத்தில் உள்ள என் தந்தையே.''

(மத்தேயு 16 /13 – 17)

இதன் கருத்து என்னவென்றால் மத்தேயு அதிகாரம் 16, வசனம் 13 – 17 வரையிலுள்ளது போல் இனி இப் பகுதிகளில் வரும் பகுதிகளும் இதுபோல் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

இதற்குரிய பகுதிகள் வேதாகமத்திலிருந்து கொடுக்கப் படும். இப்போது நாம் உங்களுக்கு உதவியாக இருக்கக் கூடியதாக ''இயேசுவே கிறிஸ்து'' என்பதை விளக்கக் கூடிய சில பகுதிகளை வாசிக்கத் தருகின்றோம்.

**பழைய ஏற்பாட்டிலிருந்து**

''உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்குமிடையே பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள். நீயோ அவளுடைய குதிக்

காலைத் தீண்ட முயலுவாய்''என்ருர்'ஆதி ஆகமம் 3(15) இரட்சகரை அளிப்பதாகக் கூறியஇவ்வாக்குறுதிமுதற் பெற்றேருக்கு அவர்களின் முதற் பாவ வீழ்ச்சியின் பின் அளிக்கப்பட்டது. இவ்வாக்குறுதி அதிகமாக தீர்க்க தரிசிகளால் எடுத்துரைக்கப்படுகின்றது.

இசையாஸ் தீர்க்கதரிசி தனது ஆகமத்தில் அநேக தடவைகளில் மீட்பரைப் பற்றிக் கூறுகின்ருர்.

அவர் கூறுவதாவது ''உங்களுக்கு ஒரு அடையாளமாக மீட்பார் ஒருவர் கருத்தரித்து கன்னியிடத்தில் இருந்து பிறப்பார், ''இதோ கன்னிப் பெண கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவர் இம்மானுவேல் என்னும் பெயர் பெறுவார்'' (இசையாஸ் 7 / 14)

இயேசு பெத்லகேமில் பிறந்தார். என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். இவை மிக்கா தீர்க்கதரிசியின் இறைவார்க்குகளாகும். அன்றியும் அவை ''கிறிஸ்துவே யேசு'' என்பதற்கும் அடையாளமாக இருக்கின்றது

''நீயோ, எப்பிராத்தா எனப்படும் பெத்லேகேமே தாவின் கோத்திரங்களுள் மிகச் சிறியதாயினும் இஸ்ராயேலின் ஆட்சி செலுத்தப் போகிறவர் உன்னிடத்திலிருந்தே எனக்கென்று தோன்றுவார். பண்டை நாட்களிலிருந்தே, பழங்காலத்திலிருந்தே வருகிற கால்வழியில் இருந்து தோன்றுவார்'' (மிக்கோயாஸ் 5/2)

இசையாஸ் தீர்க்கதரிசி எமக்குக் கூறும் இறைவாக்காவது எகிப்திலிருந்து திரும்பிவரும் இயேசுக்கிறீஸ்து, மீட்பர்,'' இஸ்ராயேல் குழந்தையாக இருந்த போதே நாம் அவன் மேல் அன்பு கூர்ந்தோம். (ஓசே 11/1)

சக்கரியாஸ் இறைவாக்கினர் கூறும் இறைவாக்காவது '' மீட்பர் ஜெருசலேமுக்கு வருவார் வெற்றி வாகை சூடுவார்'' என்பது, கிறிஸ்து எமது '' மீட்பர் '' என்பதை எமக்கு எடுத்துரைக்கின்றது. மீட்பர் ஜெருசலேமுக்கு வருகை, வெற்றி வாகை சூடுவது ஆகியவை எமக்கு எடுத்துரைப்பது கிறிஸ்து எமது மீட்பர்') என்பதையே ஆகும்.

'' சீயோன் மகளே, மிகுந்த மகிழ்ச்சியால் அக்களி, யெருசலேம் மகளே, ஆர்ப்பரி இதோ, உன் அரசர் உன்னிடம் வருகிருர் நீதியும் வெற்றியும் பெற்றுக் கொண்ட அந்த வீரர் எளியவர், கழுதையின் மேலும் பொதி மிருகக் குட்டியின் மேலும் அமர்ந்து வருவார் '' (சக்கரியாஸ் ஆகமம் 9 / 9)

இசையாஸ் தீர்க்கதரிசி கூறுவதாவது, மனிதரைப் பாவத்திலிருந்து விடுவித்த யேசு நல்லவைகளைச் செய்தார். உலகத்து மக்களின் பாவங்களைப் போக்குவதற்

காக அவர் மிகவும் மனவேதனையையும் கஷ்டங்களையும் அனுபவித்தார். இப்படியாக அவர் மனித குலத்தை மீட்டு, அவர்களுக்குப் பல வழிகளில் உதவி செய்தார். நோயுற்றோரைக் குணப்படுத்தினார். இவரே '' இரட்சகர், மீட்பர் '' ஆவர்.

( இசையாஸ் ஆகமத்தில் 40/3 - 5. 53/4 – 6, 61/1 – 3 ஆகிய பகுதிகளை வாசிக்க. )

தானியேல் இறைவாக்கினரும், தாவீது அரசனும் ''இயேசு மெசியா '' என்றும் '' அவரே மீட்பர் '' என்றும் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். தானியேல் ஆகமம் 7 / 13 – 14, சங்கீதம் 109 ஆகியவற்றை வாசிக்க.

## புதிய ஏற்பாட்டிலிருந்து

இப்போது நாம் பழைய ஏற்பாட்டுக்குச் சாட்சியாக புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் எப்படி இயேசுவின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரித்திருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்ப்போம்.

( மத்தேயு 1 / 18 – 23 ) தயவு செய்து இதை இங்கே எழுதுக.

''இயேசுவின் பிறப்புத் தோன்றியது பின்வருமாறு அவர் இம்மானுவேல் என அழைக்கப்படுவார் ( இதன் அர்த்தம் கடவுள் எம்முடன் ) மத்தேயுவின் நற்செய்தி விளக்கத்தில் இருந்து நாம் இசையாஸ் தீர்க்கதரிசியின் இறைவார்த்தை நிறைவேறுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது '' '' இதோ கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவனுக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவர். ''

இப்போது புனித லூக்காஸ் நற்செய்தியிலிருந்துஇயேசு தான் கிறீஸ்து என்பதை எப்படிப் புனித லூக்காஸ் (இயேசு இரட்சகர், மீட்பர் என்பதை )எடுத்துக் காட்டியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.,

இயேசு பெத்தலேகேம் என்னும் ஊரிலே பிறந்தபோது வானதூதர் ஒருவர் அங்கே இருந்த இடையர்கள் சிலர் முன் தோன்றிக்கூறியதாவது, 'அஞ்சாதீர்கள், இதோ மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று தாவீது ஊரிலே உங்களுக்காக மீட்பர் ஒருவர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா; குழந்தை ஒன்றைத் துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தி இருப்பதைக் காண்பீர்கள்.

( லூக்காஸ் 2 / 1 - 12 பார்க்க. )

( மத்தேயு 2 / 19 - 21 ) இதில் இசையாஸ் ஏசு

இறைவாக்கினரின் இறைவாக்கு, அதாவது ''கிறீஸ்துவே இயேசு'' என்னும் இறைவாக்கு நிறைவேறுவதைக் காணலாம்,

ஏரோது இறந்ததும், இதோ ஆண்டவரின் தூதர் எகிப்தில் சூசைக்குக் கனவில் தோன்றி ''எழுந்து பிள்ளையையும் தாயையும் கூட்டிக்கொண்டு இஸ்ராயேல் நாட்டுக்குச் செல்லும்; ஏனெனில் குழந்தையின் உயிரைப் பறிக்கத் தேடியவர்கள் இறந்துவிட்டனர்''. என்றார். அவர் எழுந்து பிள்ளையையும் தாயையும் கூட்டிக் கொண்டு இஸ்ராயேல் நாட்டுக்கு வந்தார்.

இப்போது இறைவாக்கினர் சக்கரியாஸ்சின் இறைவாக்கு எப்படிக் கூறப்பட்டிருக்கின்றது எனப் பார்ப்போம்.

''அவருடைய சீடர்கள் ................ கழுதையையும், குட்டியையும் ஓட்டி வந்து தம் போர்வைகளை அவற்றின் மேல் விரித்து அவரை மேலே அமரச் செய்தனர் பெருங்கூட்டமான மக்கள் தங்கள் போர்வைகளை வழியில் விரித்தனர். சிலர் மரங்களிலிருந்து கிளைகளை வெட்டி வழியில் பரப்பினர். கூட்டமாக முன்னே சென்றவர்களும், பின்னே வந்தவர்களும், தாவீதின் மகனுக்கு ''ஓசன்னா ஆண்டவர் பெயரால் வருகின்றவர் வாழி உன்னதங்களில் ஓசன்னா'' என்று ஆர்ப்பரித்தனர். ஜெருசலோமுக்குள் வந்த போது நகர்முழுவதும் பரபரப்புற்று இவர் யார் என்று கேட்டதும், மக்களோ ''இவர் தாம் கலிலேயாவின் நசரோத்தூரில் இருந்து வந்த இயேசு என்னும் இறைவாக்கினர்'' என்றனர். ( மாத்தேயு 21 / 7 – 11 )

புனித அருளப்பரின் நற்செய்தியில் "இயேசு இறைமகன். மீட்பர்'' என எடுத்துக் காட்டியிருக்கின்றது உங்களை அவற்றை வாசிக்குமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். இதிலே மிகவும் பிரசிததி பெற்ற முறையில் ஸ்நாபக அருளப்பர் தெளிவாக, "இயேசுவே மீட்பர்'' என்று முழுமையாக எடுத்துக் கூறுகின்றார் ..........:........

யேசுவின் சோதனை இங்கே சேர்க்கப்படலாம் ( அரு 1 / 19 – 21 )

பின்வரும் பகுதிகளையும் நீர் வாசிக்கலாம் (அரு4/1-26) யாக்கோப்பின் கிணறு, இயேசு இங்கே தான் சமாரியப் பெண்ணுக்குத் தன்னைத் தானே வெளிப்படுத்துகிறார். இப்போது உங்கள் கவனத்திற்கு 3 நற்செய்தி ஆசிரியர்களையும் தருகிறோம். லூக், மத், மாற்கு, இயேசு மறுரூபமான செய்தியை இந்த 3 நற்செய்தி ஆசிரியர்களும் கூறியிருப்பதைக் காண்கின்றோம். வானத்தில்

இருந்து ஒரு குரலொலி எழுந்தது'' இவரே என் அன்பார்ந்த மகன்.'' ( மத்தேயு 17 / 1 – 18, மாற்கு 9 / 2 - . 36, இவற்றை நீங்கள் வாசிப்பீர் )

## இயேசுவின் சொந்த வாக்குறுதி

இப்போது நாம் இயேசு தனது வார்த்தைகளில் அவர் தன்னை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களைக் காணலாம். (மத்தேயு 26/63-64). இங்கே இயேசு தான் இறை மகன் என்பதை வெளிப்படையாக எடுத்துக் கூறு கின்றார்.

தலைமைக் குருக்கள் அவரை நோக்கி. ''உயிர் உள்ள கடவுளின் பெயரால் ஆணையிட்டுச் சொல்லுமாறு உன்னைக் கேட்கின்றேன்.'' ''நீ கடவுளின் மகனான மெசியாவோ.'' என்றனர். இயேசு ''நீரே சொன்னர்? மேலும் மனுமகன் வல்லமையுள்ள இறைவனின் வலப் பக்கத்தில் அமர்ந்து வான மேகங்கள் மீது வருவதை நீங்கள் காண்பீர்கள் என்று உங்களுக்குச் சொல்கின்றேன்.'' என்றார்.

## சரித்திரத்திலிருந்து

நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விவிலிய நோக்கங்களைப் பற்றி பார்த்தீர்கள். ஆகவே நாங்கள் இப்போது உலக சரித்திரம் கிறிஸ்துவைப் பற்றி அளிக்கும் கருத்து என்ன என்று அறிய ஆவலாய் இருக்கின்றோம். ஆகவே நாங்கள் இப்போது இது பற்றிய கருத்துகளை ஆராய்வோம்.

பிளோவர் யோசுப்ஸ் இவர் இயேசுவின் காலத்தில் வாழ்ந்தவர். ஆனல் யேசுவைச் சார்ந்தவர் அல்லர். இவர் யூத குலத்தைச் சேர்ந்த போர்வீரர். இவர் இயேசுவின் சீடர் அல்லர் ஆனல் அதன் பின் அவர் இயேசுவின் சீடர் ஆனர். இவர் யேசுவைப் பற்றிக் கூறுவதாவது, ''படிப்பறிவாளி ஒருவர் எம் மத்தியில் வாழ்ந்தார், இவரை உண்மையாகவே, உண்மையான மனிதன் என அழைக்க முடியும். இவரே இயேசு. இவர் பல விதமான புதுமைகள் செய்தார். உண்மைக்காக உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.

யூதர்கள், புறவினத்தார். இரு பகுதியைச் சார்ந்தவர்களும் இவரைப் பின் பற்றினர்கள். இவரே கிறிஸ்து யேசு.

ஆனல் பிளாத்து இவரை சிலுவையில் அறைந்து கொல்லும்படி தீர்வையிட்டார்.

அவர்களுடைய சீடர்கள் அவரை விசுவாசித்தார்கள். மரித்து மூன்று நாட்களின் பின் அவர் உயிர்த்தெழுந்து அவர்களுக்குக் காட்சியளித்தார். இறைவாக்கினர் இயேசுவின் உயிர்த்தெழுதல் பற்றியும் அவர் ஆற்றவிருந்த அரும்பெரும் செயல்கள் பற்றியும் எடுத்துக் கூறியிருந்தார்கள். கிறிஸ்துவைப் பற்றிய உண்மைகளைக் கடைப்பிடிக்கும் கிறிஸ்தவ திருச்சபை இதை இன்னும் ஏற்று முன்னேற்றமடையச் செய்து வருகின்றது.



இப்போது தாசியஸ், பிலிப்ஸ் ஆகிய தூதர்கள் இயேசுவைப் பற்றி எழுதியிருப்பதைப் பார்ப்போம்.

இவர்கள் கி. பி. 1வது ஆண்டிலே வாழ்ந்து வந்தவர்கள். இவர்கள் எழுதியிருப்பதாவது, செசாரியா பிலிப் உரோமையின் ஆளுநகராக இருக்கும் போது இயேசு அவர் காலத்தில் வாழ்ந்தவர். போஞ்சு பிளாத்துவினல் மரண தண்டனை அளிக்கப்பட்டார். அக்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைத் தமது கடவுளாக ஏற்றுக்கொண்டனர்.

இப்போது நாங்கள் உங்கள் கவனத்தை சரித்திரப் புகழ்வாய்ந்த எச். ஜி. வெல்ஸ் என்பவர் பக்கமாய் திருப்புகின்றோம்.

அவர் கூறுவதாவது;இயேசு, கடவுள் தன் தந்தை எனக் கூறியிருப்பதும், இறைவனின் அரசைப் பற்றி போதித்திருப்பதும் உலக சம சகோதரத்துவத்தையே. மேலும் அவர் கூறியதாவது, அவரைப் போன்ற சரித்திரப் புகழ் வாய்ந்தவர்கள் கிறிஸ்துவை உலகப் புகழ் பெற்ற பெரியவர்களுடன் சேர்த்துக் கொள்ளமுடியும் (சரித்திரத்திலே புகழ் பெற்ற 3 பெரியோர்கள்)

மேலே உங்களுக்கு அளித்திருக்கும் விளக்கங்களில் இருந்து இயேசுக் கிறிஸ்துவே மீட்பர் என விளங்கியிருப்பீர்கள். ஆகவே பின்வரும் பயிற்சிகளைச் செய்து உங்கள் அறிவை சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

**செயற்பாடு 1**

1 இயேசு இவ்வுலகத்திற்கு வந்த நேரம் இருந்து, யூதர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது:

1 இறைவாக்கினர் ஒருவரை
2 மறை நூல் அறிஞர் ஒருவரை
3 இரட்சகர் ஒருவரை
4 நீதிபதி ஒருவரை

2 சீடர்களின் ஏற்றுக் கொள்ளுதலின்படி இயேசு

1 கிறிஸ்து
2 இறைவாக்கினர்
3 பெரிய குரு
4 யூதேயாவின் அரசர்

3 யேசுவின் பிறப்பைப்பற்றி இசையாஸ் தீர்க்க தரிசி கூறியிருப்பது.

1 தாவீதின் பரம்பரையில் இருந்து வருவார்
2 கலியோயாவில் பிறப்பர்
3 அவரை அரசர்களுக்குக் காண்பிப்பார்
4 கன்னியிடமிருந்து பிறப்பார்

4 மிக்கா இறைவாக்கினரின் உரையின்படி யேசு பிறக்க இருந்தது.

| | | | |
|---|---|---|---|
| 1 | நடு இரவிலே | 2 | ஜெருசலேமில் |
| 3 | மாட்டுத்தொழுவத்தில் | 4 | பெத்தலகேமில் |

5 யாக்கோப்பின் கிணற்றடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இருந்து யேசு தம்மை சமாரியப் பெண்ணுக்குத் தெரிவித்தது.

| | | | |
|---|---|---|---|
| 1 | மெசியாவாக | 2 | இறைவாக்கினராக |
| 3 | யூதர்களின் தலைவனாக | 4 | ஆசிரியனாக |

6 யேசுவின் சீடனாக இல்லாதிருந்த தூதனாகிய பலேவியல் யோசேப்புக்கு யேசு தோன்றியது.

1 புகழ் பெற்ற மதிப்பிற்குரிய ஒருவராக
2 கிறிஸ்துவாக
3 யூதர்களின் மீட்பராக
4 அகில உலக போதனையாளராக

7 உலக புகழ் வாய்ந்த டாசியஸ், பிலிப் என்பவர்கள் யேசுவைப் பற்றிப் பேசும் போது கூறுவது

1 யேசு எரோது காலத்திலே பிறந்தார்.
2 யேசு நாசரேத்திலே வேலை செய்துவாழ்ந்தார்
3 யேசு போஞ்சு பிலாத்துவினுல் மரணத்துக்கு தீர்வையிடப்பட்டார்.
4 மரணத்தின் பின் யேசு உயிரோடு தமது சீடர்களுக்குக் காட்சி அளித்தார்

8 எச். ஜி. வெஸ்சின் கூற்றுப்படி யேசு போதித்தது

1 யூதேயாவின் பெருமையும் ஜெருசலேமின் மகிமையும் பற்றி
2 இறைவனைத் தந்தையாக ஏற்றுக்கொண்டது இறைவனின் இராச்சியம், சம உலக சகோதரத்துவம் பற்றி
3 இறைவனின் தெய்வீக வாழ்வுக்கான உடன் படிக்கை பற்றி
4 உரோமர் ஆளுனர் பற்றி அவரின் வன்முறைச் செயல் என்ன சொல்லப்பட்டது.

> இதற்கான விடைகள் மொடியூலின் இறுதியில் உள்ளன. உமது விடைகளை இவ்விடைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க.

நீர் இங்கு செய்திருக்கும் பயிற்சி விடைகளையும் இதில் செலுத்தியிருக்கும் ஊக்கத்தையும் இட்டு நாம் பெருமை அடைகின்றோம். இப்போது யேசுக்கிறிஸ்துவைப் பற்றிய சில கருத்துக்களை ஆராய்வோம்.

**பகுதி ii**

## 4.0 இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு

புனித சின்னப்பர் கூறுவதாவது, காலம் நிறைவுற்ற போது நாம் இறைவனின் பிள்ளைகளாகும்படி திருச்சட்டத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தவர்களை மீட்டுக் கொள்வதாக் கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவாரகவும் திருச்சபைக்குக் கீழ்ப்பட்டவராகவும் அனுப்பினார் (காலத்தியர் 4 / 4)

நீங்கள் இங்கு ''காலம் நிறைவேறியது'' பற்றி ஒரு வேளை அறிய ஆவலாக இருப்பீர்கள். அதுவும் யேசுவைப் பற்றியும் அவருடைய பிறப்பைப்பற்றியும் சொல்லப்பட்டிருப்பது என்ன? என்பதை அறிய உங்களுக்கு ஆவலாக இருக்கலாம், இக்காலத்தில் ஐரோப்பாவும் வடக்கு ஆபிரிக்காவும், உரோமரால் ஆளப்பட்டு வந்தன. உரோமாபுரி முன்னேறியிருந்தது பற்றிக் கூற வேண்டிய அவசியம் இல்லை. அந்நாட்டைச் சார்ந்தவர்கள் சுதந்திரமாக அவர்கள் நாட்டில் நடமாடக் கூடியதாக இருந்ததை நீங்கள் சரித்திரவாயிலாக அறிந்திருக்கக் கூடும். உரோமாபுரியின் தலைவர்கள் கிரேக்க மொழியில் கல்வி பயின்று அவர்களது கலாசாரப் பண்பாடுகளைக் கடைப்பிடித்திருந்தார்கள்.

அக்காலத்திலே உரோமாபுரியின் எல்லாப் பாகங்களிலும் யூதர்கள் வாழ்ந்து வந்தார்கள். யூதர்களின் வழி வந்த, ஒரு கடவுளில் நம்பிக்கை கொள்வதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அரிஸ்டோட்டில் பிளேட்டோ இவர்களும் இவர்களைப் பின் பற்றிய வர்களும் இதை நாடு முழுவதும் பரப்பினர். அதே சமயத்தில் பொய் மதவழிபாடு, புதிய கருத்துப்பட்ட மதக் கொள்கைகள் இவைகளுக்கு உரோமாபுரி காரணமாக இருந்தது. இவைகளே மெசியாவின் வருகைக்குத் தக்க காலமாகவும், அவருடைய சரித்திரத்தை எடுத்துக் கூறும் காலமாகவும் இருந்தது.

**அன்பின் அடையாளம்**

பலஸ்தீனு தேசத்திலே யூதேயா நகரிலே, பெத்திலே கேம் என்னும் ஊரில் யேசு பிறந்தார், மரியாள் இவரின் தாயாகவும் சூசையப்பர் இவரின் வளர்ப்புத் தந்தையா கவும் இருந்தார். கடவுளின் அளவற்ற அன்பின் அடை யாளமே இயேசுவாகும் எனவே நாம் இப்போது உமக்கு யேசுவின் பிறப்பையும் வாழ்க்கை வரலாற்றையும் அளிக்க இருக்கிறேம்.

**செய்தி**

மேரி என்னும் இளம் கன்னி ஒருத்தி பலஸ்தீனுவிலே கலிலேயா என்னும் நகரிலே, நாசரோத் என்னும் ஊரிலே வாழ்ந்து வந்தாள். இவள் சூசை என்னும் தச்சு வேலே செய்யும் ஒருவருக்கு மண ஒப்பந்தமாகி இருந்தாள். இவர்கள் முறைப்படி விவாகம் செய்யு முன் ஒரு நாள் தேவதூதர் ஒருவர் மேரிக்கு தரிசன மானர். இந்தத் தூதர் கபிரியேல் தூதராவர். இவர் மரியாளுக்கு கூறியதாவது அவள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் கர்ப்பமாகி ஒரு மகனேப் பெற்றெடுப் பாள். அவரே இவ்வுலகின் மீட்பரும் இரட்சகருமாக இருப்பார். இவரை யேசு என்று அழைப்பார்கள்.

**இயேசுவின் பிறப்பு**



சூசையப்பர், மரியாள் விவாகம் செய்யும் முன்னமே கர்ப்பமாய் இருப்பதை அறிந்து அவளே ஏற்றுக் கொள் ளவும், இச் செய்தியை வெளியிடவும் தயங்கினர். ஆனல் தேவதூதர் அவருக்குத் தோன்றி, உண்மை யைக் கூறியதும் அவளே அவர் வீட்டில் ஏற்றுக் கொண் டார். இச் சந்தர்ப்பத்திலே தான் அவர்கள் பெத்லே முக்கு போக வேண்டி இருந்தது. ஏனெனில் அந் நாளில் உலக முழுவதிலுமுள்ள மக்கள் தொகையைக் கணக்கிடும்படி செசார் அகுஸ்து விடமிருந்து கட்டளே பிறந்திருந்தது. ஆகவே இவர்களும் தாவீதின் பரம் பரையைச் சார்ந்தவர்கள் பெத்தலேகேமுக்கு போக வேண்டியிருந்தது (அதனுல் உமக்கு தெரிந்தபடி இயேசு இங்கேதான் பிறந்தார்) அங்கே அவர்களுக்கு இருப்பதற்கு இடம் இல்லாதிருந்ததினுல் அவர் ஒரு மாட்டுத்தொழுவத்திலே பிறந்தார். மரியாள் அவரைத் துணிகளினுல் மூடிவைத்திருந்தார் இச் செய்தியை வானதூதர்கள், அங்கே ஆடு, மாடு காத் துக் கொண்டிருந்த இடையர்களுக்கு எடுத்துக் கூறி னர்கள். ஒரு அச்சமும் இன்றி எம்மால் கூற முடியும் இந்த ஏழை இடையர்களே முதல் முதலாக குழந்தை இயேசுவின் செய்தியை(கேட்டு அதை விசுவாசித்தனர்) ஏற்றுக் கொண்டார்கள்.

## விருத்தசேதனம்

குழந்தை இயேசுவை எட்டாம் நாள் விருத்தசேதனம் செய்து அவருக்கு இயேசு என்று பெயரிட்டார்கள். விருத்தசேதனம் முடிந்து 32 நாட்களின் பின், அதாவது குழந்தை இயேசு பிறந்து 40ம் நாள் குழந்தை இயேசுவை அவர்கள் ஜெருசலேம் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்றார்கள் அங்கே அவர்கள் யேசுவைக் கடவுளுக்குக் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தார்கள். அத்தோடு மோயீசனின் சட்டப்படி 2 மாடப் புரு சோடியையும் காணிக்கையாக ஒப்புக் கொடுத்தார்கள். அங்கே தான் சிமியோனும் அன்னுவும் இயேசு பற்றி உரைத்த அருள் வாக்கைப் பற்றி அறிந்திருப்பார்கள். அவர்கள் இருவரும் இயேசுவே மனுக்குலத்தின் மீட்பர் என எடுத்துரைத்தார்கள்.

## எகிப்தில் இருந்த அரசர்கள்

யேசு பிறந்த நேரத்திலே ஒரு விசேஷ நட்சத்திரம் வானத்திலே தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இதைக் கண்ட 3 அரசர்கள் குழந்தை யேசுவை வணங்க வந்தார்கள். அவர்கள் யேசுவிற்குப் பொன், வெள்ளைப் போளம், தூபம் ஆகியவற்றை ஒப்புக் கொடுத்தார்கள். அவர்கள் செல்லும் வழியிலே ஜெருசலேமில் உள்ள மாளிகையைத் தரிசிக்கச் சென்றார்கள். அங்கே தாங்கள் வந்த காரியத்தையும் வானிலே நட்சத்திரம் தோன்றியதையும் அவர்கள் அவரை வணங்கச் செல்வதையும் கூறினார்கள். இதைக் கேள்வியுற்ற ஏரோது அவ கஃளப் பல கேள்வி கேட்டுவினவினன். குழந்தை யேசுவைக கொலே செய்யத்திட்டமிட்ட ஏரோது இப்படியான ஒரு இறை வாக்கைத்தான் கேள்விப்பட்டதாகவும கூறினன் ஏரோது அரசர் அவர்களிடம் நீங்கள் போய் வணங்கி விட்டு எனக்கும் வந்து சொல்லுங்கள். அப்போது நானும் போய் வணங்குவேன் என்று கூறினன். ''யூதர்களின் அரசன்'' எங்கே பிறந்திருக்கிறுன் என்று மூன்று அரசர்களும் கேட்ட இந்த கேள்வியினுல், ஏரோது அரசன் பயப்பட்டான் ஏரோது 3 அரசர்களுக்காகக் காத்திருந்தான் ஆனுல் அவர்கள் அவ்வழியே வராது வேறு வழியாகச் சென்றது பற்றிக் கேள்வியுற்று மிகுந்த கோபம் கொண்டு பெத்தலேகமிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள 2 வயதிற்குட்பட்ட ஆண்குழந்தைகளை எல்லாம் வெட்டிக் கொல்லுமாறு கட்டளை பிறப்பித்தான். அப்போது ஆண்டவருடைய தூதர் சூசைக்குக் கனவில் தோன்றி பிள்ளையையும் தாயையும் எடுத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போம். ஏனெனில் ஏரோது பிள்ளையைக் கொல்லப் போகிறுன் என்று கூறினர்.

நாம் உமக்கு ஞாபகப்படுத்த விரும்புவது என்னவென்ருல் இந்த 3 அரசர்களுடைய நிகழ்ச்சியிலிருந்து யேசு எமது இரட்சகர் என்பதற்கு அடையாளமாக இருக்கின்ருர் என்பதுவேயாகும்.

எமது நாடாகிய இலங்கையிலே இதை நாம் தை மாதம் 6 ஆந் திகதி கொண்டாடுகின்றோம். இது ஒரு கடன் திருநாளாகும். பாரம்பரியம் எமக்குக் கூறுவது என்னவென்றால் இந்த 3 அரசர்களில் ஒருவர் இலங்கையில் இருந்து சென்றவர் என்பதேயாகும்.

### எகிப்திலிருந்து நாசரேத்துக்குச் செல்லுதல்

ஏரோது அரசன் இறந்த பின், திருக்குடும்பம், அதாவது இயேசு, மேரி, சூசை எகிப்திலிருந்து நாசரேத்திற்குச் சென்று அங்கே வாழ்ந்து வந்தார்கள். இயேசுவிற்கு 12 வயது நடக்கும் போது மரியாளும், சூசையும் யேசுவைக் கூட்டிக் கொண்டு ஜெருசலேமில் நடைபெற்ற கோவில் திருவிழாவிற்குச் சென்றிருந்தர்கள். திருவிழா முடிந்து வீடு திரும்புகையில் மரியாளும் சூசையும் இயேசு தங்களுடன் இல்லாது இருப்பதை உணர்ந்தார்கள். அவர்கள் திரும்பி அவரைத் தேடிச் செல்லுகையில் அவர் திருச்சட்டவல்லுனர்களோடு அவர்கள் மத்தியில் இருந்து அவர்கள் வினுக்களுக்கு விடையளித்துக் கொண்டிருந்தார். அப்போது மரியாள் இயேசுவிடம் ''மகனே, ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய், நானும் உன் தந்தையும் உன்னே எல்லா இடங்களிலும் தேடி அலேந்தோம்'' என்று கூறினர். அதற்குஇயேசு ''உங்களுக்குத் தெரியாதா நான் என் தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும்'' என்று பதிலளித்தார்.

பின்பு அவர் அவர்களோடு புறப்பட்டு நசரேத்துக்கு வந்து அவர்களுக்குப் பணிந்திருந்தார். அவருடையதாய்

இந்நிகழ்ச்சிகளே எல்லாம் தன்னுள்ளத்தில் இருத்திக் கொண்டிருந்தாள். இயேசு வளர வளர ஞானத்திலும் அறிவிலும் முதிர்ந்து கடவுளுக்கும் மனிதனுக்கும் மேன் மேலும் உகந்தவரானர்.

### ஞானஸ்நானம்

யேசு பிறப்பதற்கு முன் சக்கரியாஸ், எலிசபெத் இவர்கள் ஒரு மகனேப் பெற்றெடுத்தார்கள். அவர்கள் யூதா நாட்டில் இருந்ததினல் அவர்கள் மேரி, சூசை இவர்களின் உறவினராவார்கள். அவர்களின் பிள்ளேயின் பெயர் அருளப்பர். இவர் துறவறவாழ்க்கை வாழ்ந்தார். அப்போது இவர் யோர்தான் ஆற்றங்கரைக்கு அடுத்துள்ள பகுதிகளில் வாழ்ந்த மக்களுக்குப் போதித்தார்' இவர் போதித்ததாவது, ''மனந் திரும்புங்கள் இறை இராட்சியம் அண்மையில் உள்ளது.'' யோர்தான் நதிக்கரைக்கு அண்மையில் உள்ள மக்கள் அவரிடம் சென்று பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டனர். அநேகமானேர் அவரிடம் சென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் இவரே மெசியாவின் வருகைக்காக அவர் வழியை ஆயத்தப்படுத்தினர் என்பதை நீர் அறிந்திருக்கக் கூடும்.

## இயேசுவின் தூதுப் பணித் தொடக்கம்

இயேசு ஞானஸ்நானம் பெற்ற பின் அவர் பாலைவனத்திற்குச் சென்று அங்கே 40 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து செபித்தார். அப்பொழுது பசாசு இயேசுவைச் சோதிக்கத் தொடங்கியது. ஆனால் இயேசு சாத்தானின் சோதனையில் இருந்து வெற்றி பெற்றார். அதன் பின் நிகழ்ந்தது நீங்கள் அறிந்ததே. இயேசு கலிலேயாவிற்கு வந்து அங்கே அவர் 12 அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்தார். அதன் பின் அவர் மக்களுக்கு போதித்தல் கற்றுக், கொடுத்தல் புதுமைகள் முதலியனவும் செய்யத் தொடங்கினார். இயேசு தெரிந்தெடுத்த 12 அப்போஸ்தலர்களின் பெயர்கள் பின்வருமாறு:

இராயப்பர், (அவர் பெயரிட்ட சீமோன்) அவருடைய சகோதரன் பெலவேந்திரர், யாகப்பர், அருளப்பர், பிலிப்பு, பார்த்தலொமேயு, மத்தேயு, தோமையர், அல்பேயின் மகன் யாகப்பன், தீவிரவாதி எனப்படும் சீமோன், யாக்கப்பரின் சகோதரர் யூதா, காட்டிக் கொடுத்தவனாகிய யூதாஸ் இஸ்காரியோத்து என்பவர்கள்

இயேசு இவர்களைத் தெரிந்தெடுத்து அவரோடு கூடவே இருந்து அவர்களை இறைவனின் நற்செய்தியைப் போதித்து அசுத்த ஆவிகளை விரட்டவும் அவர்களுக்குச் சக்தியை அளித்தார்.

## இயேசுவின் நற்செய்தி



"காலம் நிறை வேறிவிட்டது, இறை இராட்சியம் அண்மையில் உள்ளது, மனந்திரும்புங்கள்" இதுவே இயேசுவின் நற்செய்தி ஆகும் இதையே ஸ்னாபக அருளப்பர் தனது போதனையில் மூலம் வலியுறுத்திக் கூறினார். இறைவனே மனுக்குலத்தின் தந்தை மனுக்குலத்திலுள்ள எல்லோரும் சகோதர, சகோதரிகள் ஆகவே இயேசு உலகத்தின் மக்கள் அனைவரின் சகோதரராவர்.

இறைவனின் அரசு மிக அண்மையில் உள்ளது என்பதை இயேசு புதுமைகள் செய்வதின் மூலம் வெளிப்படுத்தினார். இறைவனின் சமத்துவ ஆட்சி, அவரின் இறைத்தன்மை ஆகியவற்றை ஏற்றுக்கொண்ட மக்கள் அனைவரும் இறை இராட்சியத்தைச் சேர்ந்தவர்களே.

அந் நாட்களில் ஒரு சில மக்களிடையே இயேசுவைப் பற்றிக் கருத்து வேறுபாடு இருந்ததாக நாம் அறிகின்றோம். அவர்கள் இயேசுவின் போதனை, செய்கை, சமுதாயத்தில் நடந்துவரும் ஊழல்கள் இவைகளைக் கண்டித்துப் பேசியதனால் எதிர்த்தார்கள் அவருடைய போதனைகளை வெறுத்தார்கள். அவர் மக்களுக்குச் செய்த சேவையைத் தட்டிக் கழித்தார்கள். இவர் நாட்டில் சட்டதிட்டங்களை வெறுத்து நடப்பதாகக் கூறினர். ஆகவே சட்ட வல்லுநர்களும், மறை நூல் அறிஞர்களும் தங்கள் பக்கமாக மக்களைக் கூட்டி யேசுவை ஒழித்துக் கட்ட வழி தேடினர்:

**கடைசி இராப்போசனம்**

இயேசு இவவுலகிறகு வநதது மககளை பாவத்திலிருந்து விடுவிப்பதறகாகவே. இதற்காகஇயேசு கஷ்டங்களையும் மரணத்தையும் கொண்ட வழியைத் தெரிந்து கொண்டார். இதை இவர் தமது சொந்த விருப்பத்தின்படியே ஏற்றுக் கொண்டார். ஆகவே தம்மை அர்பணிக்கும் நேரம் வந்ததும் அவர் தம் அப்போஸ்தலர்களுடன் ஜெருசலேமுக்கு வந்தார். அங்கே அவர் அவர்களுடன் பாஸ்கா உணவை உண்ண ஆவலாக இருந்தார் இதையே நாம் கடைசி இராப்போசனம் என்கின்றோம்.

**நற்கருணை ஏற்படுத்தியது**

உணவருந்தியபின்,இயேசு அப்பத்தை எடுத்து நன்றி கூறி, பிட்டு அவர்களுக்கு அளித்துக் கூறியதாவது '' இது உங்களுக்காக அளிக்கப்படும் என் உடல் அதை என் நினைவாகச் செய்யுங்கள் '' என்றார். அவ்வாறே உணவு அருந்திய பின் கிண்ணத்தை எடுத்து '' இக் கிண்ணம் உங்களுக்காக சிந்தப்படும் என் இரத்தத்தினாலாகும் புதிய உடன்படிக்கை, இது உங்கள் பாவங்களுக்காக சிந்தப்படும் என் இரத்தம் என்றார்.

நற்கருணையை ஏற்படுத்திய பின்இயேசு தம் அப்போஸ்தலர்களைப் பார்த்து '' இவை யாவும் நற்செய்தியிலே கூறப்பட்டிருக்கின்றது.''

உமக்கு நாம் ஞாபகப்படுத்த விரும்புவது என்னவென்றால்,இயேசு இதை பூசைப் பலியில் அதாவது புதிய உடன்படிக்கையின் பலியாக நிறைவேற்றினர். இது பழைய ஏற்பாட்டில் அவர் ஒப்புக் கொடுத்த மிருகங்களின் பலியின் நினைவாகும்இயேசு பூசைப்பலியின் போது தம்மைப் புதிய உடன்படிக்கையின் பலியாக பிதாவிற்கு ஒப்புக் கொடுக்கின்றார்.

கடைசி உணவின்போதுஇயேசு தமது அப்போஸ்தவர்களின் கால்களைக் கழுவினர் இதிலிருந்து இயேசு எமக்கு தாழ்மையின் உண்மையான நோக்கம் என்னவென்பதற்கு உதாரணமாக இருக்கின்றார்.பின் இயேசு தமது அப்போஸ்தவர்களுடன் ஜெஸ்தமணித் தோட்டத்திற்குச் சென்றார். இது பெரிய வியாழன் மாலை நடைபெற்றது.

**இயேசுவைக் காட்டிக் கொடுத்தல்**

தலைமைக் குருக்களின் சேவகர்களுக்கு யூதாஸ் ஜெஸ்தமனித்தோட்டத்தில் வைத்து இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் சேவகர்கள் இயேசுவை தலைமைக்குருவாகிய அனனியாஸ், கைப்பாஸ் அவர்களிடம் அழைத்துச் சென்றனர். மறுநாள் அவர்கள்இயேசுவை பிலாத்துவிடம் அழைத்து வந்தார்கள். இவரே உரோமாபுரியின் ஆளுநர் மக்கட் கூட்டமும் தலைமைக்குருக்களும் இயேசுவிற் கெதிராகக்குற்றச் சாட்டுக்களை கொண்டு வந்தவர் அவர்கள் யேசுவைச்சிலுவையில் அறைந்து கொல்லு

மாறு கூறினர். இவர் ''தான் உரோமாபுரியின் அரசர் என்றும் செசாருக்கு வரி செலுத்தவேண்டாம் என்றும் மக்களுக்குக் கூறுகின்ருர்'' என்றும் பொய்க் குற்றம் சாட்டினர். எல்லாவற்றிலும் மேலான குற்றம் அவர் தன்னை இறைவனின் மகன் எனக் கூறிக் கொள்கின்ருர் என்று கூறியதாகும்.

அக்காலத்தில் உரோமரின் சட்டப்படி எவன் ஒருவன் தன்னைக் கடவுளின் மகன் என்று கூறிக் கொள்கிருனே அவன் மரணதண்டனைக்கு உள்ளாவான் (அரு 19 / 7) அடுத்ததாக அவர்கள் கூறியகுற்றச்சாட்டாவதுஇயேசு பகிரங்கமாக மக்கள் மத்தியில் கூறியதாவது ஆலயத்தை இடிப்படிப்பது ஆகவே பிலாத்து இயேசுவை மரணதண்டனைக்குத் தீர்ப்பிட்டான்.

### இயேசு சிலுவையில் உயிர்நீத்தல்

சேவர்கள் யேசுவிற்குச் சிலுவை ஒன்றைக் கொடுத்து அதைச் சுமந்து கொண்டு வரும்படி கூறிக் கல்வாரி மலைக்கு அழைத்துச் சென்ருர்கள். இதை மண்டை ஓட்டின் இடம் எனவும் அழைப்பர். அங்கேதான் இயேசு கள்வர்கள் இருவர் மத்தியில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.

இவ்வேளை யேசு தம் தந்தையிடம் தனது எதிரிகளுக்காக வேண்டினுர் அவர்களுடைய பாவங்களை மன்னிக்குமாறு வேண்டிக் கொண்டார் 3 மணித்தியாலங்கள் அவர் மரண வேதனை அடைந்த பின் உரத்த குரலில் ''பிதாவே உமது கையில் என் ஆத்துமத்தை ஒப்படைக்கின்றேன்'' என்று கூறி உயிர் துறந்தார்.

அவ்வூரிலே உள்ள ஒருவர், யோசப் அரிமத்தேயு என்பவர் பலாத்துவிடம் சென்றுஇயேசுவின் உடலை அடக்கம் பண்ண உத்தரவு பெற்ருர். அதன் பின் யூதர்களின் வழக்கப்படி அவர்கள் இயேசுவின் உடலை சிலுவையில் இருந்து இறக்கி பரிமளதைலம் பூசி அதை ஒரு கல்லறைக்குள் வைத்து அடக்கம் பண்ணிஞர்கள். அதன் பின் கல்லறையின் வாயிலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்து அதைக் காவல் காத்தனர்.



### இயேசு உயர்த்தெழுதல்

இயேசு இறந்து மூன்ரும் நாம் (ஞாயிறு அன்று) இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தெழுந்தார். இதை அவர் முன்னமே கூறியிருந்தார். உயிர்த்த இயேசு மரிய மதலேஞவிற்கும் அப்போஸ்தவர்களுக்கும் பல தடவைகளில் காட்சி அளிந்திருக்கின்ருர். அப்பொழுது இயேசு அப்போஸ்தவர்களிடம் கூறியதாவது உலகமெல்லாம் சென்று நற்செய்தியைப் போதித்து அவர்களை என் சீடர்கள் ஆக்குங்கள் இதை உங்களுக்கு நாம் இவ்விடத்தில் நினைவூட்ட விரும்புகின்ரேம். இப்படி என்னை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். அத்தோடு இயேசு தம் அப்போஸ்தவர்

களுக்கு திருச்சபையைக் கட்டியெழுப்பவும், அதன் விசுவாசத்தைப் பேணிக்காக்கும் உரிமையையும் அதிகாரத்தையும் அளித்தார்.

**இயேசுவின் விண்ணேற்பு**

இயேசு உயிர்த்து 40 ம் நாள் தம் சீடர்களையும் அழைத்துக்கொண்டு பெத்தானியாவுக்குச் சென்று, அங்கே அவர் தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசிகூறினார் அப்படி ஆசி கூறுகையில் அவர்களை விட்டுப் பிரிந்து வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்றார்.

இயேசு உயிரோடே இருக்கிறார் அதுவும் அவர் எம் மத்தியிலே இருக்கின்றார் அவர் நீதி, நேர்மைக்காகவும், ஒதுக்கப்பட்டோர், துன்புறுவோருக்காகவும் வேண்டி உழைக்கிறார். அவர் திரும்பவும் வானதூதர் புடைசூழ தம் முழு மகிமையுடன் வருவார். இதைத்தான் புனித சின்னப்பர் தெசலோனியருக்கு எழுதிய 2 ம் திருமுகத்தில் கூறுகின்றார். (11 தெசலோனியர் 1/6/10)

இப்போது நாங்கள் இயேசுக்கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாகக் படித்து முடித்துவிட்டோம்.

**செயற்பாடு 2**

கீழே கொடுக்கப்பட்ட பயிற்சிக்கு மிகவும் உகந்த விடையை 2 வது அளப்பதற்கான அலகுவின் இருந்து தேர்ந்தெடுத்து நிரப்புக.

1. இயேசு கிறிஸ்து இறைமகன் அவர் ஒரு கன்னியிடம் இருந்து உரிய காலத்தில் பிறப்பார் என............ கூறினர்
2. குழந்தை யேசுவை முதலில் பார்க்கச்சொன்றவர்கள்..................ஒரு குழுவினர்
3. ஏரோது அரசன் இயேசு பிறந்திருப்பதை அறிய காத்திருந்தான், ஏனெனில் அவன் குழந்தை இயேசுவை..................திட்டமிட்டிருந்தான்.
4. சூசை மேரியுடனும் குழந்தைஇயேசுவுடனும்...... ...........என்ற நகருக்கு இரவோடு இரவாகச் சென்றார்.
5. இயேசு தனது 12 வது வயதிலே..............தேவாலயத்தில் தன் பெற்றோருக்குச் சொல்லாமல் தங்கிவிட்டார்.
6. இயேசுவிற்கு............... ஞானஸ் நானம் வழங்கினார்.

7 இயேசு உரைத்த நற்செய்தி ஆவது, காலம் நிறைவேறி விட்டது …….. …….. நெருங்கிவிட்டது மனந்திரும்புங்கள்.

8 இயேசு கடைசி இராப்போசனத்தின்போது…… ……..ஏற்படுத்தினர்.

9 இயேசு தம்மைப் பரமபிதாவுக்கு……………வழியாக ஒப்புக் கொடுத்தார்.

10 இயேசு சிலுவையில் உயிர்விடும்போது, அவர் தம்மைத் துன்பப்படுத்தியோருக்காக இறைவனிடம் அவர்களை………………வேண்டினர்

உமது விடையை இறுதியில் கொடுக்கப்பட்ட விடைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க.

நீர் இப் பயிற்சியை சிறந்த முறையில் மிக ஊக்கத்துடன் செய்திருப்பதையிட்டு பாராட்டுகின்றோம்.

ஆகவே இப்போது நாம் எம் கவனத்தை இயேசு மேற்கொண்ட இறைபணிக்குச் செலுத்துவோம்.

பகுதி iii

## 5.0 இயேசு மேற்கொண்ட இறைபணி

இயேசுவின் மறைபரப்புப் பணியை நாம் பின்வரும் விடயங்களில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

1 இறை அரசைப் பற்றிய நற்செய்தியைப்பரப்புதல்

2 மனித வாழ்வின் உள்ள விசேஷ நோக்கம் பற்றிப் படிப்பிக்கின்றது அதைத் தொடர்ந்து இவை மனிதனை முடிவில்லா வாழ்விற்கு அழைத்துச் செல்லுகின்றன.

3 மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையில் இருக்கும் உடைந்த உறவைக் கட்டியெழுப்பவதன் மூலம் மனிதன் இரட்சணிய வாழ்வைப் பெற முடியும்.

### இறை அரசின் நற்செய்தியைப் போதித்தல்

யேசுவின் தலையான போதனைகள், நற்செய்திப் போதனைகள் ஆகும். என்பதை நீங்கள் நன்கறிந்திருப்பீர்கள் புனித மாற்கு இதை தமது நற்செய்தியில் எடுத்துக் கூறுகின்றார். ''காலம் நிறைவேறிற்று கடவுளரசு நெருக்கிவிட்டது. மனத்திரும்பி, இந்நற்செய்தியை நம்புங்கள் என்றார் (மாற்கு 1/15)



நற்செய்தி ஏட்டிலே இயேசு இறையரசைப் போதிப்பதற்காக உவமைகள் மூலம் எவ்வாறு மக்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் போதித்து அவர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றார் என்பதற்கு உங்களுக்கு சில உதாரணங்கள்.

இறை அரசு முன்னேற்றமடையும் விதம் - கடுகுவிதை, புளிப்பு மா, ( மத்தேயு 13 / 31 – 33 ) ( மாற்கு 4/30 – 32 )( லூகர்ஸ் 13 / 18 – 21 ) என்பன

விதைப்பவன் உவமையில் ( மத்தேயு 13 / 1 – 23 ) ( மாற்கு 4 / 1 - 20 ) லூக்காஸ் 8 / 4 - 15 ) நல்லவைகளும் தீயவைகளும் இவ்வுலகத்தில் ஒருமித்துள்ளன, ஆனால் உலக முடிவில் அவை வெவ்வேறாக பிரிக்கப்படும். நல்விதையும் களைகளும் என்னும் உவமை ( மத்தேயு 13 / 24 - 30 ) கடவுளின் நீதியையும் இரக்கத்தையும் காட்டுகின்றது. திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளிகள். ( மத்தேயு 20 / 1 – 16 )

## இறை அரசைப்பற்றிய மதிப்பீட்டுப் படிப்பினை

இறை அரசிற்கு வேண்டிய நற்பண்புகளையும், அதை நாம் பெற்றுக்கொள்ளவேண்டிய வழி முறைகளையும் பற்றி இயேசு எமக்கு கற்றுக் கொடுத்திருக்கின்றார். அவருடைய படிப்பினையின் மையச் செய்தி அன்பின் செய்தியாகும்.

கடவுளை எம்முழு இருதயத்தோடும், முழு ஆன்மாவோடும் முழுப் பெலத்தோடும் எம் முழு மனதோடும் அன்பு செய்யவும், நாம் எம்மை அன்பு செய்வது போல் எம் அயலாரையும் அன்பு செய்யுமாறும் எமக்குக் கற்றுக் கொடுத்திருக்கின்றார். மோயீசன் சட்டத்திலும் இறைவாக்கினர் ஆகமங்களிலும் கூறுவது போல் உனக்கு மற்றவர்கள் எதைச் செய்யவேண்டும் என விரும்புகிறாயோ '' அதை நீ மற்றவர்களுக்குச் செய் '' இதை நாம் உமக்கு உமது சிந்தனையில் உணவாக அளிக்கின்றோம்.

இயேசுவின் அன்பின்படிப்பினைகளை நற்செய்தி எமக்கு உவமைகள் மூலமாகவும், சிந்தனைகள் மூலமாகவும் வாழ்க்கை சந்தர்ப்பங்கள் மூலமாகவும் நல்ல வாழ்க்கை எடுத்துக் காட்டுகள் மூலமாகவும் எடுத்துக்கூறுகின்றது. இவர் படிப்பினையில் எமக்கு எடுத்துக் காட்டும் இன்னுமொரு முக்கியத்துவம், தாழ்மை, மன்னிப்பு என்ற இரண்டு தலையான புண்ணியங்களாகும், ( மத்தேயு 60/25–34) ( 13 / 44–53 ) ( 18 / 23–35 ) லூக்காஸ் ( 18 / 19 – 24)

இயேசு ஓர் உயிருள்ள போதனை ஆசிரியர். அவருடைய படிப்பினைகள் முடிவில்லா வாழ்வோடு ஒன்றுபட்டுள்ளன. இது மனிதனுடைய சிந்தனையையும் உலகத்தையும் நல்ல செயல்களுக்கு மாற்றும் சக்தி கொண்டது.

இது இறைவார்த்தையையும் மனிதன் முன்னேற்றத்தையும் கொண்டுள்ளது. இதுவே இறை அரசின் நற்செய்தி இயேசு உண்மையான கடவுளின் வார்த்தை என்பதை இங்கே உமக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். அவர் அதிகாரத்தோடு மக்களுக்குப் போதித்தார், (மத்தேயு 7/39) ''உண்மையிலும் உண்மையாக உங்களுக்குச் சொல்லுகின்றேன்''. இதை போன்ற வார்த்தைகளை இயேசு உபயோகப்படுத்தினர் என்பதை நினைவில் வைத்திருப்பது மிகவும் நல்லது.

இயேசு அப்போஸ்தலர்களுக்கு கற்றுக்கொடுத்த செபத்தில் நாம் காணக்கூடிய மிகச் சிறந்த பண்பு யாதெனில் நாம் எம்மை அன்பு செய்பவர்களை மட்டுமின்றி எம் பகைவர்களையும் அன்பு செய்யவேண்டும் எனக் கூறுகின்றார். அத்துடன் தமது பரலோக பிதாவை எம் பிதா என்று அழைக்கும் வாய்ப்பையும் எமக்கு அமைத்துக் கொடுத்திருக்கின்றார். இதிலிருந்து நாம் சமசகோதரத்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

நீங்கள் நல்ல சமாரித்தன் பற்றிய உவமையைப் படித்திருப்பீர்கள். இவ் உவமையிலே நாம் எப்படி எமது அயலவரை அன்பு செய்ய வேண்டும் என இயேசு எமக்கு எடுத்துக் கூறியிருக்கின்றார். (லூக்காஸ் 10 / 25 – 29)

ஊதாரிப் பிள்ளையின் உவமை இறைவனின் அளவற்ற அன்பையும் பாவமன்னிப்பையும் பற்றி எமக்கு விரிவாக எடுத்துக் கூறுகின்றது. லூக்காஸ் 15/11-21)

பரிசேயனும், ஆயக்காரனும் என்னும் உவமை செபத்தின் முக்கியத்துவத்தை எமக்கு எடுத்துக் கூறுகிறது! எமது செபம் எப்போதும் தாழ்ச்சியுள்ளதாகவும் விசுவாச அடிப்படையில் அமைந்துள்ளதாகவும் இருக்க வேண்டும் என்று கூறுகின்றார். இப்படிப் பட்டவர்களே இறை இராச்சியத்திற்கு தகுதி பெற்றவர்களாவர் என்பது கூற்று. (லூக் (18/9-14)

இயற்கையின் சூழ்நிலையைப் பயன்படுத்தி யேசு வானத்துப் பறவைகளையும வயல்வெளி மலர்களைப் பற்றியும் பேசுகின்றார். இவைகளில் இருந்து எமக்கு அவர் கற்பிப்பது என்னவென்றால் இறைவனின் அளவு கடந்த அன்பையும், பராமரிப்பையும் இனி அன்பிற்கு பிரதியன்பாக நாம் எப்படி எம் வாழ்வை மாற்றி அமைக்க வேண்டும் என்றும் கூறுகின்றார். அவர் எமக்குக் கூறும் புத்திமதியாது, ''எதை உண்போம் எதைக் குடிப்போம் என்று கவலைப்பட வேண்டாம். ஏனெனில் புறவினத்தார் தாம் இவையனைத்தும் தேவை என உங்கள் வானகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே கடவுளின்

அரசையும் அவருக்கு ஏற்புடையதையும் முதலில் தேடுங்கள். இவையனைத்தும் உங்களுக்கு சேர்த்து கொடுக்கப்படும்''. (மத்தேயு 6/24–34) என்பன.

யேசு நற்செய்தியில் பற்பல சம்பவங்களில் எமக்கு பாவிகளின் மன்னிப்பைப் பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கின்ருர். இவ்விதமான சம்பவங்களை நாம் அனுபவவாயிலாக அறிந்து கொள்கின்ருேம். சமுதாயத்திலிருந்து பாவி என்று விலக்கப்பட்டிருந்த சக்கேயு, பாவிப் பெண்ணுகிய மரிய மதலேஞ இவர்களோடு யேசு நடந்து கொண்ட விதம். (லூக் 19/1–10, 7/30-50)



தாலந்து உவமையின் மூலம் யேசு கற்பிக்கும் படிப்பினை யாவது நாம் எமக்குள்ள கொடைகளை இறை இராச்சியத்துக்காக விருத்தியடைச் செய்யவேண்டும் என்பது. (மத்தேயு 52/14-30)

இவ்வுலக செல்வம், சந்தோஷம் எனும் ஆசைகளைத் துறந்து, துன்ப துயரங்களை பொறுமையோடு ஏற்றுக் கொள்வதிலும், ஞானஸ்நானத்தினுல் புதுவாழ்வை அடைவதனுலும் நாம் பரலோக இராச்சியத்தை அடையமுடியும் என்பதை இயேசு மலைப் பொழிவின் மூலம் எமக்குக் கூறியிருக்கின்ருர். (மத்தேயு 6/1-12)

இயேசு திரளான கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர அவருடைய சீடர் அவரை அணுகினர். அவர் திருவாய் மலர்ந்து போதிக்கலானுர். எளிய மனத்தோர் பேறு பெற்ருேர், ஏனெனில் விண்ணரசு அவர்களதே, துயருறுவோர் பேறுபெற்ருேர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். சாந்தமுள்ளோர் பேறுபெற்ருேர் ஏனெனில் மண்ணுலகு அவர்கள் உரிமையாகும்.

நீதியின் பால் பசிதாகமுள்ளோர் பேறுபெற்ருேர், ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்ருர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய உள்ளத்தோர் பேறுபெற்ருேர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர். சமாதானம் செய்வோர் பேறுபெற்ருேர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர். நீதியின் நிமித்தம் துன்பப்படுவோர் பேறுபெற்ருேர், ஏனெனில் விண்ணரசு அவர்களதே. என் பொருட்டுப்பிறர் உங்களை வசைகூறித் துன்புறுத்தி உங்கள் மேல் ஒவ்வாதது பொல்லாதது எல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்ருேர். அகமகிழ்ந்து களி கூருங்கள் ஏனெனில் வானத்தில் உங்கள் கைமாறு மிகுதியாகும்.

''உன் சிலுவையை சுமந்துகொண்டு என் பின் செல்'' என்று இயேசு எமக்குப் படிப்பிப்பதன் மூலம் துன்பத்திற்கும் மரணத்திற்கும் அவர் ஒரு புதுக்கருத்

தூட்டுகின்றார். இங்கே நாம் மத்தேயு நற்செய்தியில் உள்ள இவ்வாக்கியத்திற்கு உம்து கவனத்தைச் செலுத்துகின்றோம். ''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். பணக்காரன் விண்ணரசில் நுழைவது அரிது மீண்டும் உங்களுக்குச் சொல்லுகிறேன். பணக்காரன் விண்ணரசில் நுழைவதை விட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது'' என்றார் மத்தேயு (19/23 – 24) ஊசியின் காது ஒரு சிறிய நுழைவாயிலாகும். நான்கு சுவர்கள் அமைந்த இடத்தில் ஒரு பெரிய கதவு கொண்டது ஜெருசலேம் நகரம். பெரிய கதவுகளின் பின் சிறிய கதவுகள் அமைந்திருக்கின்றன. அவர்கள் ஒட்டகத்தை அதனூடாக எடுத்துச் செல்வதானல் ஒட்டகத்தில் உள்ள சுமையைக் கழற்றியே அதை எடுத்துச்செல்ல வேண்டும். அதன் பின் அவர்கள் திரும்பவும் அதை ஒட்டகத்தின்மேல் கட்டிச் செல்லவேண்டும் இவை எமக்கு எடுத்துக் கூறுவது கடினவேலையையே ஆகும்.

## இரட்சணியம்- கிறிஸ்து எங்கள் மீட்பர்

தண்ணீரை இரசமாக மாற்றியது அப்பம் பெருகச்செய்தது, புயற்காற்றை அடக்கியது, நீரின்மேல் நடந்து சென்றது இப்படியான புதுமைகளை இயேசு மக்களின் இரட்சணியத்திற்காகச் செய்தார் மனிதனின் கீழ்படிதலின்மையால் அவன் இறைவனுக்கும் தனக்கும் இடையில் உள்ள உறவைப் பிரித்துக் கொண்டான். அதனுல் அவன் பாவம், மரணம், நோய் அடிமைத்தனம் இவைகளுக்கு ஆளாகினன். ஆகவேதான் இயேசு மனிதனை இப்படியான அடிமைத்தனத்திலிருந்து மீட்பதற்காக மரணத்தை ஏற்றார்.

இறந்தவர்களை மரணத்லிருந்து உயிர்ப்பித்தார். இதிலிருந்து இயேசு மக்களுக்கு விடுதலையை அளிக்கின்றார் என்பதை நயின் பட்டணத்து விதவையின் மகனை உயிர்ப்பித்தலில் இருந்தும் (லூக் 7/11-15) ஜயிரின் மகளை உயிர்ப்பித்திலில் இருந்தும் (மாற்கு 5 / 21 – 43) வாசறசை உயிர்ப்பித்ததில் இருந்தும் (அரு 11 / 1 – 46) அறிந்து கொள்கின்றோம்

மனிதனை அவனுடைய கவலையிலிருந்தும், துன்பத்தில் இருந்தும் அவரின் செய்கையினுலும் அவருடைய வார்த்தையினுலும் காப்பாற்றினர் நோய்களைக் குணமாக்கினர் குருடருக்குப் பார்வை அளித்தார். செவிடரைக் கேட்கப்பண்ணினர். அசுத்த ஆவிகளை விரட்டினர். துன்பப்படுபவர்களே என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதலை அளிப்பேன், என்று இயேசு மக்களுக்குக் கூறி அழைத்தார். அவரது வெளியரங்க உள்ளரங்க முயற்சிகள் அனைத்தும் அவர் மக்களுக்கு

அளிக்கவிருந்த விடுதலையே ஆகும். மனிதரின் பாவங்களை மன்னிப்பதன் மூலம் அவர் ஆத்மீக சக்தி வாய்ந்தவர் என்பதை எடுத்துக் காட்டினார்.

மத்தேயு நற்செய்தியில் எமக்கு எடுத்துக்காட்டுவதாவது இயேசு திமிர்வாதக் காரனைக் குணமாக்கி முன் அவனுக்கு அளித்த அறிவுரை ''மகனே தைரியமாக இரு உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டுள்ளன.'' (மத்தேயு 9 / 1 – 7) என்பதேயாகும். இப்புதுமையில் இருந்து இயேசு எமக்கு எதை எடுத்துக் காட்டுகின்றார்? இறைவனின் அளவு கடந்த அன்பை அவர் எமக்கு எடுத்துக் காட்டுகிறார் என்பதை நீர் நிச்சயமாக விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அவர் ''இறைவனின் மகன்'' என்பதையும் கிறிஸ்து அவரே எதிர்பார்க்கப்பட்ட ''இரட்சகர்'' என்றும் ''இறை இராட்சியம் இவ்வுலகிற்கு வந்து விட்டது'' எனவும் எடுத்துரைத்தார்.

இறை சித்தப்படி இரட்சகரின் போதனைப்பணியாவது மனிதகுலத்தை பாவம் என்றும் அடிமைத்தனத்தில் இருந்து விடுவித்து இவ்வுலகத்திற்கு ஆன்மீக சுதந்திரத்தை அளிப்பதே ஆகும். அது மட்டுமன்றி இறைவன், மனிதனுக்கு இடையில் முறிந்த உறவைக் கட்டியெழுப்பவும் மனித சதாமுயத்திற்கு சமாதானத்தை அளிக்கவும் அவர் இவ்வுலகிற்கு வந்தார்.

விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை அவர் மரணத்தில் இருந்து காப்பாற்றி அவள் நடக்கவேண்டிய சரியான பாதையை அவளுக்குக் காட்டினார் (அரு 8/1-11) சிலுவை மரணத்தை ஏற்றுக் கொண்டு துன்பத்தையும் வேதனையையும் அனுபவித்து எம்மை பாவத்தில் இருந்து விடுவித்தார். இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவைகளை ''பாஸ்கா மறைபொருள்'' என அழைக்கின்றோம். இயேசுவின் போதனைப் பணியின் உச்ச நிலை கல்வாரிப் பலியிலே தான் தங்கியுள்ளது. ஆகவே நாம் அனைவரும் இப்போது இறைவன் – மனிதன் என்ற உறவால் இணைக்கப்பட்டிருக்கின்றோம்.

இயேசு எம்மைப் பாவத்தில் இருந்து மீட்டு, எமக்குச் சுதந்திரம் அளித்த செய்கை அவரின் உத்தானத்திலே முடிவடைகின்றது. இதுவே இயேசு இறைமகன் என்னும் உண்மையின் மிகச் சிறந்த சான்றாகும். அவர் மரணத்தை வென்றார்; ஆகவே நாமும் மரணத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றோம். என்னும் உண்மை புலப்படுகின்றது.

அவரது இரண்டாம் வருகையில் அவர் உலக மக்கள் அனைவருக்கும் முடிவில்லா வாழ்வைப் பெற்றுத்தருவார்.

**செயற்பாடு 3** இங்கே கிறிஸ்துவின் மேற்குறிக்கப்பட்ட இறைபணியை அடிப்படையாகக் கொண்டு சில வினுக்கள் தரப்பட்டுள் ளன. அவற்றில் மிகவும் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து எழுதுக.

1 இயேசுவின் மேற் குறிக்கப்பட்ட இறைபணி மூலம்

1 மோயீசனின் சட்டத்தின் பிழைகளைக் காண் பித்ததைக் காண்கிறோம்.

2 அவர் அவரது தந்தை மீது கொண்ட அளவு கடந்த அன்பைக் காண்கிறோம்.

3 அவர் பாவிகளைத் தண்டித்ததைக் காண்கின் றோம்.

4 உரோம் ஆளுனர்களுக்கு எதிராக இருந்த தைக் காண்கின்றோம்.

2 இயேசு மீட்பைப் பெற்றுக் கொடுக்க அவர் தன் உயிரைச் சிலுவையில் ஒப்படைத்தார் ஏனெனில்

1 தலைமைக் குருக்களுக்கிணங்க,

2 இறைவாக்கினரின் இறைவாக்கிற்கிணங்க

3 சீடர்களுக்கு அளித்திருந்தமைக்கிணங்க

4 தன சொந்த சித்தத்தோடு இணைந்த இறை சித்தத்திற்கிணங்க

3 இயேசு திமிர்வாதக்காரனைக் குணப்படுத்தியது,

1 பாவிகளின் மன்னிப்பின் அடையாளமாக

2 அவர் புகழை அடைந்து கொள்வதற்காக

3 தலைமைக்குருக்களுக்குத் தனது அனுதாபத் தைத் தெரிவிப்பதற்காக

4 அவரைப் பின்பற்றுபவர்களின் எண்ணிக் கையை அதிகரிப்பதற்காக

4 இயேசுவின் போதனையில் நியமனங்களாவன

1 பழைய ஏற்பாட்டின் சட்டங்கள்

2 இறை அரசைப் பற்றிய நற்செய்திகள்

3 உவமைகள்

4 மக்களின் புகழ்

5 கலிலேயாவில் மேற்கொண்ட இறை பணியை ஆரம்பித்த இயேசு கூறியதாவது மனந்திரும்புங் கள்........

1 இறை இராச்சியம் அண்மையில் உள்ளது.

2 பாவங்களுக்கு மன்னிப்புப் பெறுங்கள்.

3 வாழ்க்கையை மாற்றியமையுங்கள்

4 தண்டனையில் இருந்து பாதுகாத்துக் கொள் ளுங்கள்

6 இயேசு கூறுவதாவது, உமது நண்பர் மீது அன்பு செய் எதிரிகளுக்கு...........

1 மன்னிப்பு அளி
2 இரக்கம் காட்டு
3 கருணைகாட்டு
4 அன்பு செய்

7 ஊதாரிப் பிள்ளையின் உவமையில் இருந்து நாம் அறிந்து கொள்வதாவது இறைவன் பாவிகளை,

1 வெறுக்கிறார்
2 தீர்ப்பிடுகிறார்
3 பொறுக்கிறார்
4 தண்டிக்கிறார்

8 இறை அரசின் புதுச் சிறப்பியலாக விளங்குவது,

1 பத்துக் கட்டளைகள்
2 கடுகு விதையின் உவமை
3 இயேசு சிலுவையில் இருந்து உரைத்த ஏழு வசனங்கள்
4 8 மலைப்பொழிவு

மொடியூலின் முடிவில் உள்ள விடைகளோடு உமது விடைகளை ஒப்பிடுக.

நீர் பயிற்சி மூன்றை நல்ல முறையில் செய்து முடித்துள்ளீர். ஆகவே நாம் இப்போது இயேசு உலகத்தின் இறைவன் என்பது பற்றிப் பார்ப்போம்.

## பகுதி iv

# 6.0 இயேசுக்கிறீஸ்து உலகின் இறைவன்

இயேசுக்கிறீஸ்து இவ்வுலகின் இறைவன். ஏனெனில் அவர்க்கு மரணத்தின் மேலும் உயிரினத்தின் மேலும் அதிகாரம் உண்டு, அவர் எம்மைப் பாவத்தில் இருந்து விடுவித்து, தெய்வீக அருளை அளித்திருக்கின்றார். இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் எல்லா மகிமையும் சக்தியும் அவருக்கே உரியது.

இயேசுவிற்கு மரணத்தின் மேல் வல்லமை உண்டு என்பதை அவர் இறந்தவர்களை உயிர்பித்ததில் இருந்து நாம் அறிந்து கொண்டோம். அவர் இறந்த மூன்றும் நாள் தானாகவே மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் இதிலிருந்து நாம் இயேசுவே உயிர்ப்புக்கும் மரணத்திற்கும் முதல்வர், எங்களது உயிர்ப்பிற்கு மூலகாரணமும் இவரே என்பது தெளிவாகத் தெரிகின்றது. அவர் உயிர்

களுக்கெல்லாம் ஆண்டவர் என்பதைத் தானுகவே வெளிப்படுத்தியிருக்கின்ருர். உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் உயிர் வாழ்வான் உயிர் வாழ்க்கையில் என்னில் விசுவாசம் கொள்பவன் எவனும் ஒருபோதும் சாகான் (அரு 11/ 25 - 26)

பாஸ்கா மறை பொருளின் மூலம் இயேசு எம்மை அசுத்த ஆவியிலிருந்தும் பாவத்திலிருந்தும் காப்பாற்றியிருக் கின்ருர். அவர் தன்னை எங்களுக்காக, உயிர்ப்பலியாக, எமது இரட்சணியத்திற்காக அளித்திருக்கின்ருர். ஆகவே மீட்கப்பட்ட நாம் அவரைச் சேர்ந்திருக்கின் ரும் நாங்கள் அவரின் இறை மகன் என்னும் உரி மையின் சுவடுகளாக இருக்கின்ரும்.

நாம் இழந்த மோட்ச சம்பாவனையையும் தெய்வீக அருளையும் இயேசுவே எமக்குப் பெற்றுத் தந்திருக்கின் ருர். ஆகவே எமது புது வாழ்வு அவருக்கே உரித்தா னது.

அவரே எமது புதுவாழ்வின் உயிரும் நித்திய வாழ்வு மாவார். ஏனெனில் அவர் எங்களுக்கு நித்திய வாழ் வைப் பெற்றுத் தந்திருக்கின்ருர். ஞானஸ்நானத்தின் மூலம் எம்மைப் பாவத்திலிருந்து மீட்டு எமக்கு புது வாழ்வின் தெய்வீக அருளை அளித்திருக்கின்ருர்.

பரலோகத்திற்கு எழுந்தருளிய இயேசு அவரது இரட் சணிய அலுவலை நிறைவேற்றி எம்மைப் பிரமபிதாவு டன் சேர்த்து ஆண்டு நடத்தி வருகிருர். பரிசுத்த திருச்சபைக்கு தூய கவியின் ஒலியைக் கொடுக்கின்ருர்: இதனைக் கொண்டு திருச்சபை எம்மை ஆண்டு நடத்தி வருகின்றது. அவருடைய பயணத் தொடர்ந்து செய்வ தற்காக அவர் மக்களை அழைத்திருக்கின்ருர், அதே போல் அவர்களுக்கு அவருடைய போதனையைத் தொடர்ந்து செய்ய அதற்கான உரிமைகளையும் வழங்கி யிருக்கின்ருர். அவர் என்றும் எம் மத்தியில் இருந்து செயலாற்றுகின்ருர்,

கிறிஸ்தவ ஆசிரியர் என்ற விசேட அழைப்பை பெற்றி ருக்கும் உங்களுக்கு திருச்சபையில் கிறிஸ்துவின் போத னைப் பணியில் ஒரு விசேட பொறுப்பு உண்டு. இந்தப் பொறுப்புணர்ச்சியில் நாம் உமக்குக் கூற விரும்புவதா வது நாம் இதை இரர்ச்சியத்தின் முதிர்ச்சி அடைந்த கிறிஸ்தவர்களின் அடையாளமாக விளங்க வேண்டும். இது மனிதன் தன்னை பாவத்தில் இருந்து விலக்கித் தன்னை நல்வாழ்விற்கு அழைத்துச் செல்வதே ஆகும்.

இயேசுபரலோகத்திற்குச் சென்றது அங்கே எமக்கு ஒரு நல்ல இடத்தை தயார் பண்ணுவதற்காகும், உலக முடிவில் அவர் தம் முழு மகிமையுடன் எம் இறைவனுக எமக்கு இரட்சணியத்தை அளிக்க வருவார். ஆம் உலக முடிவில் அவர் இறை இராச்சியத்தின் அரசராகத் தோன்றுவார்.

''இறை அரசு அதன் அதன் முழு மகிமையுடன் காணப்படும்'' என்று யேசு கூறியிருக்கின்றூர். அவர் அதை தன் தந்தையுடனும், பரிசுத்த ஆவியுடனும் புத்துயிர் பெற்ற படைப்பாக ஆண்டு நடத்தி வருவார்,

உயிர்த்தெழுந்த இயேசு கூறுவதாவது ''விண்ணிலும், மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள் பிதா, சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட அனைத்தையும் அவர்களுக்கு போதியுங்கள். இதோ நான் உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருக்கின்றேன்''

(மத்தேயு 28/18-20)

ஆகவேஇயேசு அவருடைய வாழ்வு, மரணம், உத்தானம் என்பவற்றுல் எமக்கு எடுத்துக் காட்டுகின்றூர். அவர் தானே உலக இரட்சகர். கிறிஸ்து உலகிற்கு விடுதலை அளிப்பவர் என்பதை உலக தொடக்கத்திலே இருந்து எமக்கு எடுத்துக் காட்டியுள்ளார். அத்தோடு அவரே எமக்கு இரட்சணியத்தையும் அளித்துத் தந்தவர் என உறுதிப்படுத்தியுள்ளார்.

இதைப் பற்றி புனித இராயப்பர் வலியுறுத்தும் போது எடுத்துக்கூறியதாவது ''எனவே நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே, கடவுள் ஆண்டவரும் மெசியாவுமாக ஆக்கினர் என்பதை இஸ்ராயேல் குலத்தவரெல்லாம் உறுதியாக அறிந்து கொள்வாராக'' (அப்பணி 2/36)

**செயற்பாடு 4** இப் பயிற்சியை உங்களது அறிவுக்கேற்றவாறு இயேசு இறைவன்' என்னும் தலைப்பின் கீழ் உம்மால் முடிந்தளவு செய்க. சரியானதின் கீழ் கீறிடுக.

1 இயேசுக் கிறிஸ்து இறைவன் அவர் உயிர்ப்பிகரும் மரணத்திற்கும் ஆண்டவர் என எமக்கு எடுத்துக் காட்டுவது.

1 நோயாளர்களைக் குணப்படுத்தியதால்
2 உந்தானமானதால்
3 மறுரூபமானதால்
4 பரலோகத்திற்கு எழுந்தருளியதினல்

2 ''நான் உங்களுக்கு எல்லாவிதமான அதிகாரத்தை யும் இவ்வுலகிலும் மறு உலகிலும் அளித்திருக் கின்றேன், அதனால் நீங்கள் உலகெங்கும் போய் மக்களை எனக்குச் சீடராக்குங்கள்'' இவ்வாக்கியம் கூறியது :

1 இயேசு 2 இராயப்பர்
3 சின்னப்பர் 4 அருளப்பர்,

3 உயித்தெழுதல் பற்றி இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் காட்டியிருப்பது, பாடுகள் பட்டு, சிலு வையில் அறையுண்ட உயிர்த்தெழுந்த ''கிறீஸ்து இறைவனே'' என்று கூறியவர்

1 சின்னப்பர் 2 யோக்கப்
3 மத்தேயு 4 இராயப்பர்

4 கிறீஸ்து விண்ணேற்றம் அடைந்திருப்பது,

1 எமக்கு ஓர் இடத்தை ஆயத்தப்படுத்த
2 வானதூதர்களோடு ஒன்றித்திருக்க
3 கஷ்டப்படாமல் அமைதியாக இருக்க
4 அரசராக முடிதரிக்கப்படுவதற்காக

5 எமது உயிர்த்தெழுதலை இயேசுவின்

1 மரணம் 2 உயிர்ப்பு 3 விண்ணேற்றம்
4 இரண்டாம் வருகை

எடுத்துக் கூறுவது

உமது விடைகளை முடிவில் உள்ள விடைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இப்போது நீங்கள் கற்றுக்கொண்ட அனைத்தையும் ஒன்றாக தொகுத்து அளிக்க இருக்கிறோம்.

## 7.0 பொழிப்பு

பாவத்தில் வீழ்ந்த மனித குலத்தை மீட்பதற்காக இறைவன் தன் மகனை அனுப்புவதாக வாக்குப் பண்ணினார் அவரே யேசுக்கிறிஸ்து. ஆனால் சிலர் அவரை ஆண்டவரும் கிறிஸ்துவுமாக ஏற்றுக்கொள்ள வில்லை. பழைய ஏற்பாட்டில் உள்ள இறைவாக்கு கள் அனைத்தும் கிறிஸ்துவின் வாழ்விலே நிறைவு அடைகின்றன

புதிய ஏற்பாட்டில் எடுத்துக் கூறப்படும் படிப்பினைகள், புதுமைகள், கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் எமக்கு யேசுவே கிறீஸ்துவின் இறைமகன் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

சரித்திரப் புகழ் பெற்றவர்களாகிய பிளோவியஸ், யோசுபஸ, டோட்டியஸ் இவர்களும் இயேசுவே கிறீஸ்து என்பதை ஏற்றுக் கொள்கின்றார்கள்.



இயேசு பெத்தலேமில் பிறந்து திருமுழுக்கு அருளப்பரினல் திருமுழுக்குப் பெற்று தனக்கு 33 வயது நடக்கும்போது பகிரங்கமாகத் தனது இறைபணி வாழ்க்கையை ஆரம்பித்தார். இயேசு உலகமெங்கும் இறை இராச்சியத்தைப் பரப்புவதற்காக 12 அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களோடு வாழ்ந்தவர்களுக்கு புதுச்சிந்தனைகளைக் கொடுத்தார். இயேசுவின் போதனையைச் சிலர் எதிர்த்தனர். அவரை பிடித்து அவருக்கு மரண தண்டனை அளித்து (போஞ்சுபிளாத்து) அதிகாரத்தினல் அவரை சிலுவையில் அறைந்து கொன்றனர். ஆனல் அவர் இறந்து 3ம் நாள் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு எழுந்தருளியிருக்கிறார். அவர் உயிரோடு எங்கள் மத்தியில் நம் கண்களுக்கு புலப்படாத வகையில் எம்மோடுகூட இருக்கின்றார்.

கிறீஸ்துவின் போதனைப் பணியாவது மனிதன் தன் பாவத்தினல் இழந்து கொண்ட ''இறைவன் - மனிதன் என்றும் உறவைத் திருப்பிப் பெற்றுக் கொடுத்தலே ஆகும். பரிசுத்த ஆவி இப்போது பரிசுத்த திருச்சபையில் இருந்து அதே வேலையைத் தொடர்ந்து இன்னும் செயலாற்றி வருகின்றது. மரணத்தை வென்றஇயேசு உண்மையாகவே எம் யேசுவும் கடவுளும் ஆவார்.

## 8.0 பிற்சோதனை

நாம் இப்போது இந்த அளப்பதற்கான அலகைப் படித்து, அதற்கான அறிவைப் பெற்றுள்ளோம் இவ் அறிவைக் கொண்டு, பின்வரும் பயிற்சிகளைச் செய்ய எத்தனிப்போம்.

1 சரியான விடையைக் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக.

(மூன்று, எட்டு, பத்து, பன்னிரெண்டு, முப்பத்து மூன்று, நாற்பது, ஐம்பது)

1 இயேசு இவ்வுலகிலே ................ வருடங்கள் வாழ்ந்தார்

2 இவர் தனது கடைசி...............ஆண்டுகளைப் போதனைப் பணிகளில் செலவழித்தார்.

3 இயேசுவிற்கு.....ஆம் ஆண்டில் விருததசேதனம் செய்யப் பட்டது.

4 இயேசு தன் பெற்றோக்குத் தெரியாது கோவிலில் நின்றபோது அவருக்கு............வயது.

5 இயேசு உயிர்த்து.........நாட்களின் பின் பரலோகத்திற்கு ஆரோ பணமானார்.

2 ''அ'' பகுதியில் உரிய சரியான விடையை ''ஆ'', பகுதியில் தெரிவு செய்க.

| | ''அ'' | | ''ஆ'' |
|---|---|---|---|
| 1 | இயேசு பிறந்த இடம் | (அ) | கலிலேயா |
| 2 | திருக்குடும்பம் இயேசுவை எடுத்துக்கொண்டு ஏரோவிற்குப் பயத்திற் சென்றது | (ஆ) | பெத்தானியா |
| 3 | தேவாலயம் அமைந்திருந்தது | (இ) | ஜெஸ்தமணி |
| 4 | இயேசு மறைந்த வாழ்க்கை வாழ்ந்தது | (ஈ) | எகிப்து |
| 5 | இயேசு திருமுழுக்குப் பெற்ற நதி | (உ) | கல்வாரி |
| 6 | இயேசு தனது பகிரங்க வாழ்கையை ஆரம்பித்தது | (ஊ) | ஜெருசலேம் |
| 7 | எந்த இடத்தில் இயேசு விதவையின் மகளை உயிர்ப்பித்தது | (எ) | யோர்தான் |
| 8 | இயேசுவைக் காட்டிக் கொடுத்த இடம் | (ஏ) | பெத்தலேகம் |
| 9 | இயேசு இறந்த இடம் | (ஐ) | நாசரேத் |
| 10 | விண்ணேற்றமடைந்த இடம் | (ஒ) | நயீம் |

3 சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.

1 இடையர்களுக்கு வானதூதர்கள் இயேசுவின் பிறப்பைத் தெரிவித்தனர். ( )

2 அகுஸ்து சீசர் நட்சத்திரத்தின் உதவியுடன் பாலன் இயேசுவை வணங்க வந்தார் ( )

3 இறைவாக்கினர்களாக சிமியோன் அன்னாள் என்பவர்கள் இயேசுவே மீட்பர் என எடுத்துரைத்தனர். ) )

4 போஞ்சு பிளாத்து பாலன் இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்லுவதற்கு உத்தரவு அளித்தான் ( )

5 விருத்தசேதனம் செய்து கொள்ளுவதற்காக 12 வயதான இயேசு ஜெருசலேம் தேவாலயத்திற்குச் சென்றார். ( )

5 இயேசு ஸ்நானகர் யோவானிடமிருந்து திருமுழுக்குப் பெற்றார். ( )

6 திருமுழுக்கு 'அருளப்பர் இயேசுவின் முன்னோடியாக விளங்குகின்றார். ( )

8 இயேசுவின் படிப்பினையாவது'' உம்மை அன்பு செய்பவர்களிடம் மாத்திரமே நீ அன்பு செய்'' என்பதாகும் ( )

9 ''உன் சிலுவையச் சுமந்து கொண்டு என்னைப் பின் செல்'' இது யேசுவின் அறிவுரையாகும் ( )

10 இயேசு மனிதரின் உடல்நோயைக்குணப்படுத்தியது பாவங்களுக்கு மன்னிப்பு அளிப்பதின் அடையாளமாக ( )

11 கடைசி இராப்போசனத்தின் போது இயேசு திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார் ( )

12 ஏரோது அரசன் இயேசுவை சிலுவையில் அறைந்து கொல்லத் தீர்ப்பிட்டான் ( )

13 இயேசு 12 அப்போஸ்தலர்களைத் தெரிந்தெடுத்தது புதுமைகள் செய்வதற்காக ( )

14 இரட்சணியத்தின் சேவை உயிர்த்தெழுதலில் முடிவடைகின்றது ( )

15 இயேசு கூறியதாவது ''இவ்வுலக முடிவில் அவர் முழுமகிமையுடன் திரும்பவும் வருவார் '' ( )

16 இயேசு கானுவில் செய்த புதுமையின் காரணமாக ஊமையான ஒரு மனிதனைப் பேச வைத்தனர் ( )

17 இயேசு உலக முடிவில் முழு மகிமையுடன் வருவது எமக்கு சம்பவானயை அளிப்பதற்கு ( )

18 பணக்காரன் பரலோக இராட்சியத்திற்கு செல்வது எளிது என இயேசு கூறியிருக்கின்ருர். ( )

19 இயேசு பரிசுத்த திருச்சபையை ஏற்படுத்தியது தனது பணியை தொடர்ந்து செய்வதற்காக. ( )

20 கிறிஸ்தவ மறை ஆசிரியரின் கடமையானது இயேசு அளித்திருக்கும் அழைப்பிற்குப் பணிந்து முழு உலகத்தையும் அடிமைத் தனத்தில் இருந்து விடுதலைக்கு அழைத்துச் செல்வதாகும் ( )

4 விடை தருக

1 ''இதோ சருவேசுரனின் செம்மறி இதோ உலகின் பாவங்களைப் போக்குபவர். நான் பேசும் போது பேசியது இவரைப் பற்றியே. எனக்குப் பின்னுல் வர இருப்பவர், ஆனுல் அவர் என்னை விட உயர்ந்தவர் ஏனெனில் அவர் எனக்கு முன் தோன்றியவர்'' இதைக் கூறியவர் யார்?

2 பேறுபெற்ற வாழ்வைப் பெற இருப்பவர்களுக்கு இயேசுவினுல் அளிக்கப்பட்ட உரையின் பெயர் என்ன?

3 இயேசுவின் பாடுகள், மரணம், உத்தானம் இதற்கு அளித்திருக்கும் பெயர் என்ன?

4 வாழ்க்கைச் சான்றுகளாலும், புதுமைகளினுலும், போதனையினுலும் இயேசு எல்லாவிதமான நற்செய்தியை அளித்திருக்கிருர்.

5 புதிய ஏற்பாட்டின் எந்தப் பலி பழைய ஏற்பாட்டின் எப்பலிக்கு ஒத்தாக இருக்கிறது?

உமது விடைகளை இறுதியில் உள்ள விடையோடு ஒப்பிட்டுப் பார்க்க

> நீங்கள் இம்மொடியூலை இப்போது கற்று முடித்துள்ளீர்கள். இது பயன் தருமாறு கற்கப்பட்டுள்ளதா என்பதை இது தொடர்பாக நீங்கள் சமர்பிக்கும் ஒப்படையிலிருந்தே அறியலாம் கீழே தரப்பட்டுள்ளது அப்வொப்படையாகும். அதற்கு வடையளித்து தொலைக்கல்விக் கிளைக்கு அனுப்புக.

## 9.0 ஒப்படை

''யேசுவே எமது விடுதலை'' எனனும் தலையங்கத்தின் கீழ் 500 சொற்களுக்கு குறைபடாது ஒரு கட்டுரை எழுதுக.

(அவற்றிற்கு நீர் இவைகளைப் பாவிக்கலாம்)

1 ''இயேசுவே கிறிஸ்து' என்னும் சாட்சிகள்
2 இயேசு மேற்கொண்ட இறை பணி
3 ''இயேசு கடவுள்''
4 நாங்கள் எப்படி யேசு மேற்கொண்ட இறை பணியைத் தொடர்ந்து செய்வது?

## 10.0 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| முற்சோதனை | 1 (iii) | 2 (iv) | 3 (i) |
| | 4 (ii) | 5 (iv) | 6 (iii) |
| | 7 (ii) | 8 (iv) | |
| செயற்பாடு 1 | 1 — ili | 2 — i | 3 — iv |
| | 4 — iv | 5 — i | 6 — ii |
| | 7 — iii | 8 — ii | |

செயற்பாடு 2 (1) சின்னப்பர் (2) இடையர்கள்
(3) கொல்வதற்கு (4) எகிப்து (5) ஜெருசலேம்
(6) திருமுழுக்கு அருளப்பர் (7) இராச்சியம்
(8) திவ்விய நற்கருணை (9) மனிதனின் பலி
(10) மன்னிக்குமாறு

| | | | |
|---|---|---|---|
| செயற்பாடு 3 | 1 — ii | 2 — iv | 3 — i |
| | 4 — iii | 5 — i | 6 — iv |
| | 7 — ii | 8 — iv | |
| செயற்பாடு 4 | 1 — iii | 2 — i | 3 — iv |
| | 4 — i | 5 — ii | |

பிற்சோதனை. 1 1 முப்பத்துமூன்று (2) மூன்று (3) எட்டு
4 பன்னிரண்டு 5 நாற்பது

2 1 ஏ (2) ஈ (3) ஊ (4) ஐ (5) எ
6 அ (7) ஓ (8) இ (9) உ (10) ஆ

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 1 | √ | 2 | × | 3 | √ | 4 | × |
| | 5 | × | 6 | √ | 7 | √ | 8 | × |
| | 9 | √ | 10 | √ | 11 | √ | 12 | × |
| | 13 | × | 14 | √ | 15 | √ | 16 | × |
| | 17 | √ | 18 | × | 19 | √ | 20 | √ |

4 1 திருமுழுக்கு அருளப்பர்
2 மலைப்பொழிவு
3 பாஸ்கா மறைபொருள்
4 இறை இராச்சியம்
5 பரிசுத்தமான மனிதன்

## 11.0 சொற் தொகுதி

**விருத்தசேதனம்** இஸ்ராயேல் குலத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஆண் குழந்தையும் பிறந்து எட்டாம் நாள் விருத்த சேதனம் செய்து கொள்வது அவர்களின் வழமையாகும். இது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் இருக்கும் உடன்படிக்கையாகும்.

**இறைவாக்கினர்** இறைவாக்கினரின் உரைக்கிணங்க மனித பழக்க வழக்கத்துடன் வாழ்வது அனைவரையும் அன்பு செய்து, இறைவன் முன்பாக நீதிமானாக விளங்குவது.

**பரிசேயர்** இஸ்ராயேல் கூட்டத்தினர், இவர்கள் சட்டத்திலுள்ள எழுத்துப்படி வாழ்ந்தவர்கள்.

**திருமுழுக்கு** நீரினால் கழுவுவது, இது மனமாற்றத்தின் ஓர் அடையாளமாகும், திருச்சபையில் இது தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. திருமுழுக்குப் பெறுபவரின் தலையில் தண்ணீர் ஊற்றப்படுகின்றது.

**மனிதாவதாரம்** இறைமகன் உடல் எடுக்கிறார். (மனிதனாகிறார்) பரி. கன்னியின் வயிற்றில் மனிதவுரு எடுத்து பிறந்தார்.

**உருமாற்றம்** புது உலகப் படைப்பு. உலக முடிவில் நடக்கவிருக்கும் உருமாற்றத்தின் பிரதிபலனாகும்.

**நற்செய்தி** நான்கு நற்செய்தி ஆசிரியர்களால் எழுதப்பட்ட புத்தகமாகும். அது இயேசுவின் போதனை, புதுமைகள், படிப்பினைகள் எல்லாவற்றிற்கும் மேலாக யேசுவின் வாழ்க்கையை அடக்கியுள்ளது. இவை புதிய ஏற்பாட்டிற் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்ற 4 நற்செய்தி ஆசிரியர்கள், மத்தேயு, மாற்கு, லூக்காஸ், அருளப்பர்.


பாலஸ்தீன் நாடு
(இயேசுவின் காலத்தில்)
சீதோன்
இந்துரேயா
அபிலெனெ
சரெப்தா
தீர்
பிலிப்புச் செசரியா
பெனிக்கியா
கலிலேயா
திராக்கோனித்து
கொராசின்
கப்பர்நகூம்
பெத்சாயிதா
காணாவூர்
கலிலேயாக்கடல்
திபேரியா
கார்மேல் மலை
நாசரேத
நயீம்
கதாரா
தெக்கப்பொலி
செசரியா
மத்தியதரைக்கடல்
சலீம்
அயினோ
யோர்தான் நதி
கெராதா
சிக்கேம்
சமாரியா
கரிசிம் மலை
அரிமத்தியா
எப்பிராயீம்
லித்தா
எம்மாவுஸ்
பெத்பாகே
பெத்தானியா
யெருசலேம்
யூதேயா
பெத்லேகேம்
கும்ரான்
பெரேயா
சாக்கடல்
இதுமேயா
0 20 40 60
கிலோ மீற்றர்

குறிப்பு